# தென்மொழி


## தூயதமிழ் பேசுங்கள், எழுதுங்கள்!

தமிழ்நாட்டின் விடுதலையை நினைந்திடுவீர்;
நினைப்பதற்கே அஞ்சுவோர்கள்,
தமிழினத்தின் முன்னேற்றம் கருதிடுவீர்;
கருதுதற்குத் தயங்குவோர்கள்,
தமிழ்மொழியைப் பேணுதற்கு முனைந்திடுவீர்;
பேணுதற்கும் தயக்கம் கொண்டால்
தமிழரென்ற பெயர்கூடத் தரையினிலே
தமிழர்க்குத் தங்காதன்றோ?

தமிழென்றால் தூயதனித் தமிழ்மொழியே!
தமிழெழுதிப் பேசாதார்கள்
தமிழென்று பிறமொழிகள் பிழைமொழிகள்
கலந்தெழுதிப் பேசிவந்தால்
தமிழ்மொழியும் தரங்குறைந்து நாளுக்கு
நாளழிந்து தாழ்வதுண்மை!
தமிழ்மொழியும் பேணுதார் தமிழரென்று
பெயர்தாங்கல் தாழ்ச்சியன்றோ?


சுவடி : 17
ஓலை : 8

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
உருபா 1-2



www.thamizham.net - Free E book No 7504

# நமக்கு வந்த மடல்கள்.

**0:806:** பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். பள்ளிப் பாட நூல்களில் **Physics** என்ற சொல்லுக்கு **இயற்பியல்** என்று பயன் படுத்தி வருகிறார்கள். **Physics** என்ற ஆங்கிலச் சொல்லின் வேர் **Phusis** என்ற கிரேக்கச் சொல்லாகும். அதன் பொருள் இயல்பு— **Nature.** பொருள்களின் இயல்பை ஆராயும் துறை இயல்பியல் (இயல்பு + இயல்.) அஃதெப்படி இயற்பியலாகும்? இயல் + பெயர் = இயற் பெயர். இயல் + தமிழ் = இயற்றமிழ். இயல் + சொல் = இயற் சொல். ஆனால் இங்கு நிலை மொழி இயல்பு ஆயிற்றே! மேலும் 'இயற்பியல்' என்று பலுக்கிக் கேட்பதற்கும் இனிமையாக இல்லை. செவியுணர்வு புண்படுவது போலிருக்கிறது. எனவே தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தார் உடனடியாக இத் திருத்தத்தைச் செயற் படுத்துமாறு வேண்டிக் கொள்கிறேன்.

—**ந. முத்துக்குமரன்,** பல்லடம்.

**0:807:** வணக்கத்திற்குரியீர், ஐயா, தங்களின் 'சாதியொழிப்புக்கு ஒரு திட்டம்!' படித்தேன். தங்களது திட்டம் தாங்கள் கருதுவதுபோல **25** ஆண்டுகளுக்குள் மட்டுமன்று, **2500** ஆண்டுகள் போனாலும் வெற்றி பெற முடியாது.

சாதியின் பிடிப்பு கல்விக்கூடங்களிலும் அரசின் சலுகை பெறும் கல்விச் சான்றிதழ்களிலும் மட்டுமே இருப்பதாகக் கருதி இருக்கின்றீர்கள். இஃது ஒரு தவறான கணிப்பாகும். நூற்றுக்கு **30%** (விழுக்காட்டுக்குச்) குறைவாகக் கல்வி பெறும் இன்றைய நிலையில் கல்விச் சான்றிதழ்களில் மாற்றம் செய்வதால் எப்படிச் சாதியுணர்வு ஒழிந்து போய்விடும்? எனவே சமயம் மாறுவது, சான்றிதழ்களில் மாற்றம் செய்வது என்பவை சாதி ஒழிக்கவல்ல கருவிகளல்ல. நூற்றுக்கு நூறு விழுக்காடு கல்வி பெறுதலும், பொருளியல் சமநிலையுமே சாதி ஒழிக்கவல்ல சிறந்த கருவியாகும். இந்நிலை வரும் வரை இப்போதைய இட ஒதுக்கீடு முறைகளும், சலுகைகளும் தேவையாகும். — **தி. அன்பழகன்,** திருச்சி-16.

**0:808:** அன்புள்ளங் கொண்ட தென்மொழி ஆசிரியர் அவர்கட்கு! ஈழ நாட்டிலிருந்து தமிழகம் வந்துள்ள நான் தாங்களின் தென்மொழி இதழைப் படித்து மகிழ்வதுடன் ஈழத்தில் இருக்கும் என் நண்பர்களுக்கும் அவற்றை அனுப்பி வைக்கின்றேன். (சுவடி 17. ஓலை 2) இதழில் 'தினமணிக்கதிரின் சாதி வெறித் தூண்டுதலை முதலமைச்சர் உடனே தடுத்து நிறுத்த வேண்டும்' என்ற தலைப்பினைப் படித்ததும் எனக்குச் சிரிப்பு வந்து விட்டது. காரணம் முதல்வர் அவர்கள் அன்று திரைப்படத்தில் நடிக்கும் போது 'சாதிகள் இல்லை என்று பேசி நடித்ததைப் பல திரைப் படங்கள் மூலம் பார்த்துள்ளேன்; தாங்களும் பார்த்திருப்பீர்களென நினைக்கின்றேன் அப்படி நடித்தவர்தாம் தமிழகத்தின் ஆட்சிப்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

www.thamizham.net - Free E-book No 7504

"கெஞ்சுவதில்லை பிறர்பால்,
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!



# தென்மொழி

சுவடி: 17 ஓலை 8: .
[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]
துலாம். தி. பி. உ௰கக-
அக்-நவ-1980.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்
புரப்பாசிரியர்கள்
தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
தென்மொழி ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்
அமைச்சர்: அழ. இளமுருகன், அறி. இ
[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன

## தமிழீழ விடுதலை முயற்சியில் ஏற்பட்டு வரும் பின்னடைவுகள்.



உலகெங்கும் பரந்துபட்டு வாழ்கின்ற தமிழர்களுக்கு எங்கேனும் ஒரு விடிவு தோன்றாதா என்று எண்ணி எதிர்பார்த்துக் கொண்டிருந்த நெஞ்சங்களுக்கு ஓர் ஊக்கமும் உவகையும் தோன்றும்படி, தமிழீழத் தனி நாட்டுக் கிளர்ச்சி இலங்கையில் தோன்றியது. இலங்கை என்பது ஓரே நாடன்று; வரலாற்றின் சுழிவு நெளிவுகளுக்கிடையில், தமிழீழம், சிங்களம் எனும் இரண்டு நாடுகளையும் உள்ளடக்கி அறிவிக்கப் பெற்ற ஒரு நிலப் பகுதி என்பதை. உலகின் பெரும்பாலான நாடுகள் எண்ணிப் பார்க்கவும், சில நாடுகள் ஏற்றுக்கொள்ளவுமான முயற்சிகள் கடந்த காலங்களில் பலபடியாக நடைபெற்று வந்தன; வருகின்றன. தமிழீழ விடுதலைக்கான முயற்சிகளில் இதுவரை ஈழத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள், கொடுமைகள் பல. அவர்கள் சிந்திய குருதி, கொடுத்த உயிர்க் காவுகள் மிகுதி. விலை கொடுத்துப் பெற முடியாத அவ் விடுதலை வேள்விக் கனவில், அங் [illegible]ள இளைஞர்களும், விடுதலைப் போராட்ட உணர்வாளர்களும் இவ்

www.thamizham.net - Free E book No 7504

வாறு அல்லற்பட்டு, அடிமுடி காணாத அவ் விடுதலைக் கொடுமுடியை எட்டுதற்கு அரும் பாடுபட்டு வருகையில், அண்மையில், அவர்களிடை ஏற்பட்ட கொள்கைக் குழப்பங்களாலும், உள்ளழிவுப் போராட்டங்களாலும், அவ் விடுதலைப் போராட்டமே ஓர் இழிவு படுத்தப் பெற்ற வெற்று முயற்சியாகவும், அழிவு நோக்கிப் போகும் கீழறுப்பான் வேலையாகவும் போய்க்கொண்டிருப்பதை, உலகெங்கணுமுள்ள தமிழர்கள் பார்த்தும் கேட்டும் உள்ளம் பதை பதைத்து, உடலம் விதிர்ப்புற்று நடுங்கும் நிலைக்கு ஆளாகியுள்ளனர். இவ்வுண்மையை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இந்நிலைக்குக் கரணியம் அங்குள்ள தமிழர்களைக் கட்டியாண்டு, தன் ஒற்றையாட்சிக்கு உட்படுத்திக் கொடுமை பல செய்யும் செயவர்த்தனே அரசு, அண்மையில் அறிமுகப்படுத்திய **'மாவட்ட மீவளர்ச்சி' (அபிவிருத்தி) அவை'**க் கோட்பாடேயாகும்.

நம்மைப் பொறுத்த வரை 'மாவட்ட மீவளர்ச்சி அவை'க் கோட்பாடோ செயற்பாடோ எந்த அடிப்படையினைக் கொண்டதாகவும் அமையட்டும். அத் திட்டத்தை அல்லது தீர்மானத்தை அங்குள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி தன் மிகப் பெரும்பான்மையான உறுப்பினர்களின் கருத்துப்படி ஆதரித்து ஒப்போலை செய்ததும், அதையடுத்துக் கூட்டணியில் ஏற்பட்ட பிளவுகளும் ஒருவரை யொருவர் மறைமுகமாகவும் நேரிடையாகவும் தாக்கிக் கொள்ளும் வசைவுகளுந்தாம் நம்மைப் பெருங் கவலைக்கும் கருத்தாய்வுக்கும் ஆளாக்கியுள்ளன. எதிரிகள் எள்ளி நகையாடுதற்கும் இழிவுபடப் பேசுவதற்கும் இடங் கொடுத்துக்கொண்டு வரும் கூட்டணி உறுப்பினர்களுக்கும், அங்குள்ள அனைத்துத் தமிழர்களுக்கும் இத்தகையதோர் இழிவுநிலை வந்திருக்கக் கூடாது. தமிழர்களின் ஒருங்கிணையாப் போக்கிற்கு இஃதொரு தலைசிறந்த எடுத்துக் காட்டென – வரலாற்றுக் கறை படிந்த நிகழ்ச்சியாக—ஆகி விட்டது. இனி இக் கறையைப் போக்குவது அத்துணை எளிய செயலாக நமக்குப் படவில்லை.

நாம் பலமுறை கூறி வந்ததைப் போல் ஒரு விடுதலை இயக்கம் என்பது படைத்துறைக் கட்டுப்பாட்டினும் பல மடங்கு இறுகிய கட்டுப்பாட்டுக்கு உரியதாகும் இதில் தலைமை யமைப்பைத் தேர்ந்து கொள்வது என்பது பலவகை ஆய்வுகளுக்கும் பின்னரே நிகழ வேண்டிய ஒரு செயல். அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பெற்ற தலைமை, ஒரு கூட்டணியால் இயக்கப் பெறுவதும் சிறந்த அமைப்புடையதே! இவ்வாறு கூட்டணி உறுப்பினர்கள் தேர்ந்து அமைத்துக் கொண்ட ஒரு செயற்குழு, காலத்தின் தேவை கருதியோ அல்லது சில பல தந்திர முறைகளை முன்வைத்தோ, அரசு கொணரும் ஒரு திட்டத்தை ஆதரித்தோ, எதிர்த்தோ ஒரு தீர்மானத்தைக் கொணர்கின்றது என்று சொன்னால், அதற்கு அக் கூட்டணியே ஆதரிக்கின்றது

www.thamizham.net - Free E book No 7504 -

அல்லது எதிர்க்கின்றது என்பதுதான் பொருளாக இருத்தல் முடியும். செயற்குழு வேறு, கூட்டணி உறுப்பினர்கள் வேறு என்னும் நிலை—ஒரு தீர்மானத்தைச் செயற்குழு ஏற்றுக்கொள்ளும் அல்லது மறுத்துரைக்கும் அந்தக் காலகட்டம் வரையில்தான் இருத்தல் வேண்டும். கூட்டணியின் செயற்குழு அத் தீர்மானத்தின்மேல் ஒரு முடிவு செய்த பின்னர் அம்முடிவு ஏற்புடையதோ, ஏற்கவியலாததோ, கூட்டணியின் முடிவாகத்தான் அது கொள்ளப்பட வேண்டும். பொதுவாகவே, இன்று உலகெங்கணும் பரவியுள்ள குடியரசுக் கோட்பாட்டின்படி ஒரு கொள்கை பெரும்பான்மையரால் ஏற்றுக் கொள்ளப் பெற்ற பின், சிறுபான்மையர் அதற்கு உடன்பட்டுப் போவதே, ஆளுமை நெறிக்குப் பொருந்துவதாகும். அதுவும் ஒரு விடுதலை யியக்கத்திற்கு இந்நிலை கட்டாயம் தேவையுடைய ஒரு முடிவு ஆகும். இம் முடிவில் மாற்றமோ, பின்வாங்கலோ இருக்குமானால், எந்த ஒரு சிறு முடிவையும் எவரும் வெற்றியாகப் பிறர் அனைவரும் ஒப்புக்கொள்ளும்படி நிறைவேற்றிவிட முடியாது. எவரெடுக்கும் எந்த முடிபிலும் கருத்து வேறுபாடுகள் இருக்கவே செய்யும் மாந்த அறிவு நிலைக் கோட்பாடு அது. ஒருவரை, அவர் சார்ந்த அனைவரும் ஆதரிக்கும் ஒரு நிலை, எப்பொழுதும் சரியான முடிவெடுப்பதற்குப் பயன்படாது. அது வல்லாண்மையை ஆதரிக்கும் வலலதிகாரப் போக்கே ஆகும். எனவே கருத்து வேறுபாடுகள் வரவேற்புக்குரியனவேயாகும். ஆனால், அக் கருத்து வேறுபாடுகள் ஒரு நிலை ஆய்வுக்குட்படுத்தப்படும் வரைதான் பாராட்டுக்குரியனவாகும். கருத்தாய்வு நிலை முடிந்து, கருத்துத் தேர்வு நிலையாக மாறி, அது முடிவாகவும் கொள்ளப் பெற்று விட்டால், ஒரு கொள்கையை அல்லது இலக்கை நோக்கிப் போகும் ஒரு கூட்டத்தினர்க்கு, அந்நிலை ஏற்புடையதொன்றாகவே ஆகிவிட வேண்டும். அல்லாக்கால் கொள்கைச் சிதைவுகளும், உட்பூசல்களும் தோன்றி, நோக்கத்தையே அழித்துவிடும் சூழ்நிலைகள் உருவாகும். இக்கால், நம் தமிழீழ விடுதலைக் கூட்டணியினர்க்கு நேர்ந்துள்ள ஒருநிலை—இது போன்ற ஒரு கட்டழிவு நிலையே என்பதை மிகவும் வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியிருக்கின்றது.

இனி, உணர்வு வேறு; செயல் வேறு. உணர்வு செயலாக மலர்வதற்கு முன் பல படிநிலைகளைத் தாண்டிச் செல்லல் வேண்டும். உணர்வு நிலையில் மிகத் தீவிரமாக இருப்பவர் செயல் நிலையில் மாறுபாடுறுவது நிகழக் கூடியதாக விருக்கிறது. சொல்லும் செயலும் பெரும்பாலும் ஒன்றாக இருப்பதில்லை. மிகப் பெரும்பாலானரிடையே அவை மாறுபடுகின்றன.

> எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
> வேறாகும் மாந்தர் பலர்.

www.thamizham.net - Free E book No 7504

—என்பது திருக்குறள். விடுதலையுணர்வுடன் பேசுபவர்கள், எழுதுபவர்கள் அனைவரும் விடுதலைப் போராட்டத்திற்கு வந்துவிடுவார்கள் என்று நம்புவதற்கில்லை. (தமிழகத்தின் கடந்த காலப் போராட்டத் தலைவர்களது போக்கின் தொடக்க, இறுதிகளைப் பார்த்தாலே இவ்வுண்மை நன்கு விளங்கும். தமிழினத்தின் கொடுமையான மனவியலமைப்பில் இதுவும் ஒன்று.) இனி அவ்வாறு பேசாமலும் எழுதாமலும் உள்ள எத்தனையோ இளைஞர்கள் விடுதலைப் போராட்டப் பெருந்தீயில் தங்களை நெய்யாக உருக்கி ஊற்றிக் கொண்டுள்ளதை நாமறிவோம். எனவே சரியான போராட்ட நிலைகள் உருவாகும் வரை, தம்மை நாமே அளவிறந்து வியந்து மதிப்பிட்டுக் கொள்ளக்கூடாது.

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

எனவே, கூட்டணியின் தலைமை, இன்னும் காய்ந்து முறுக வேண்டிய விடுதலையுணர்வின் காலத்தேவை நோக்கி, இடையில் வந்த சில அரசுத் திருத்தங்களையோ திட்டங்களையோ ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஒரு நாட்டின் உள்முக ஆளுமைக் கழுக்கங்களைப் போல், இஃது கூட்டணியின் ஓர் ஆளுமைக் கழுக்க நிலையாகவும் இருக்கலாம். இதனை எந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் வெளிப்படையாகப் போட்டு உடைத்துவிட முடியாது. ஆனால், தன் போக்குக்கு ஒத்து வராத பந்திக்காரர் மேல் சினந்து கொண்டு சோற்றுச் சட்டியை உடைக்கும் பதற்றக்காரரைப் போல், கூட்டணியின் முடிவைக் கேட்டு, அதனை ஆர அமர அமைந்து ஆய்ந்து விளக்கம் பெறாமல், அல்லது விளக்கம் பெற விரும்பாமல், தங்களைச் சுமந்து கொண்டிருக்கும் கூட்டணித் தலைமையினரின் மேல் சேற்றை வாரி இறைப்பதும், அவர்களை அரசும், பிற வெளிநாட்டினரும் மதித்து அஞ்சுகின்ற போக்கிற்கு ஏதம் வரும்படி இழுக்கையும் இழிவையும் உண்டாக்குவதும், நுனிமரத்திலிருந்து கொண்டு அடிமரத்தை அறுக்கின்ற அறியாமைச் செயலே ஆகும்.

காணிப் பிரிவு வேண்டி வழக்காடிக் கொண்டும் போராடிக் கொண்டும் உள்ள வேளையில், பெய்கின்ற மழையில் உழவடித்துக் கொள்வது, நம் நிலையை இன்னும் வலுப்படுத்திக் கொள்ளவும் உதவும். காலக் கனிவு நோக்கி அமைவதும் பின்வாங்குவதும் குற்றமன்று. அரச தந்திர முறைகளில் அதுவும் ஒன்று.

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

என்று, இப் பின்வாங்கும் முறையை, மறநெறிக்கண் ஒன்றாகப்

www.thamizham.net - Free E book No 7504

படுத்துவார் திருவள்ளுவர். எதிரிகளும் மதிக்கும் இத்தகைமையை நம்மவரே கோழைமை என்றும் நலன்துய்ப்பின் விளைவு என்றும் கொச்சைப்படுத்திக் கூறின், அதன்பின் விளைவை யார்தான் தடுத்து நிறுத்திவிட முடியும்? நேற்று வரை பல்லாண்டுக் காலமாக — எல்லாவற்றானும் போற்றுதலுக்குரியதாக மதிக்கப் பெற்றிருந்த ஒரு தலைமை, திடுமென, தம்மைச் சார்ந்திருப்பவரின் பெரும்பான்மைக் கருத்தை ஏற்றுக்கொண்ட அளவிலேயே, மிகவும் இழிந்ததாகவும், தகுதியற்றதாகவும் ஏசவும் பேசவும் பெறுமானால், நம் முன்னறிவு நிலையும் முன் தேர்வுத் தகுதியும் சரியானவைதாமா என்று எண்ணிப் பார்த்தல் வேண்டும். தனக்குத் தகுதியான ஒரு தலைமையைத் தேர்ந்து கொள்ளும் அடிப்படை யறிவும் முன்னுணர்வும் கூட ஒரு கூட்டணிக்கு, ஒரு விடுதலை யியக்கத்திற்கு இல்லையெனில், அதுவே அவ்வியக்கம் இன்னும் விடுதலைக்குரிய பக்குவம் பெறவில்லை என்பதைக் காட்டுவதாகாதா? தானே அமைந்து கொண்ட தலைமை என்பது வேறு. நாமாக அமைத்த தலைமை என்பது வேறு. இரண்டுக்கும் பொருளிலும் இயக்கத்திலும் வேறுபாடுண்டு. விடுதலைக் கூட்டணியின் இப்பொழுதுள்ள தலைமைப் பொறுப்பாளர்கள் அனைவரும் நம் மதிப்பிற்கும் பின்பற்றுதலுக்கும் உரியவர்களாகவே இருந்து, திடுமென அவர்கள் அனைவரும் — அல்லது பெரும்பாலானவர்கள் — தம் கொள்கைக் கோட்பாடுகளில் தம்மைப் பின்பற்றுகிறவர்கள் எள்ளி நகையாடும்படி, இழிவாகப் பேசும்படி நடந்து கொள்கிறார்கள் என்றால், இஃது எதிரிக்கும் இளக்காரமான ஒருநிலை மட்டுமன்று: அவர்களைப் பின்பற்றும் நமக்கும் ஓர் இழுக்கான நிலை; ஓர் இழப்பான நிலை; இனி நம்மை எள்ளளவும் ஈடேற்றிக் கொள்ள முடியாத ஓர் இறங்கு நிலை என்றே அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

இனி, ஒரு நிலையைப் பற்றிய கருத்து வேறுபாடு வேறு; அது பற்றிய மன வேறுபாடு வேறு. கருத்து வேறுபாடு பேசித் தீர்ப்பது; மன வேறுபாடு பேசித் தீர்க்க முடியாதது. கருத்து வேறுபாடு ஒரு கருத்தையோ, அது தழுவிய செயலையோ பற்றியது. மன வேறுபாடு ஓர் ஆளையோ, அவரின் இயக்கத்தையோ பற்றியது. கருத்து வேறுபாடு மன வேறுபாட்டை உண்டாக்காது. ஆனால் மன வேறுபாடு கருத்து வேறுபாட்டை உண்டாக்கும். கருத்து வேறுபாடு கருத்தை மட்டுமே வெறுக்கும்; தாக்கும். மன வேறுபாடு ஆளையே வெறுக்கும்; தாக்கும். இவ்வடிப்படை மனவியல் உண்மைகளைக் கொண்டு பார்த்தால், தமிழீழ விடுதலைக் கூட்டணியினரிடம் ஏற்பட்டிருப்பது கருத்து வேறுபாடாகத் தெரியவில்லை. மன வேறுபாடு என்றும் நம்புவதற்கில்லை.

பொதுவாக, ஓர் இயக்கத்தின் தலைமை பலவகையான ஆய்வுகளின் பின் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுவது மிகவும் இன்றியமையாதது. அவ்வாறு தேர்ந்த பின் அதைக் கருத்து வேறுபாடுகளுக்

# செய்திகள்

**1. சென்னைத் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பாவலரேறு :**

கடந்த **16-10-80**-ஆம் நாளன்று இரவு **8-15** மணிக்கு பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** சென்னைத் தொலைக்காட்சியில், 'வாழ்க்கைக் கூறுகள் வழங்கும் திருக்குறள்' என்னுந் தலைப்பில் ஒரு கருத்துரையாடலில் கலந்து கொண்டார். அதில் துணைப் பேராசிரியர் திரு. **வீரபாண்டியன்** க. மு. அவர்கள் வினவிய திருக்குறள் பற்றிய வினாக்களுக்கு, ஆசிரியர் விடையளிக்கையில், திருவள்ளுவர் தம் ஒப்புயர்வற்ற நூலில், 'அன்பொடும் அறனொடும் பொருந்திய குடும்ப வாழ்க்கை' 'வேறு பாடற்ற பண்புள்ள சமநிலைக் குமுகாய அமைப்பு', 'நேர்மையும் நடுநிலைமையும் பொதுமையும் சார்ந்து, பிழையில்லாக் கொடுமையற்ற அரசு' ஆகிய மூன்று கூறுகளைப் பற்றிக் கூறும் கருத்துகளைச் சான்றுகளுடன் மிக விளக்கமாக எடுத்துக் கூறினார். நிகழ்ச்சி மிகவும் பயனுடையதாக இருந்ததென்று அனைவரும் பாராட்டினர்.

**2. செல்வதுரை – விசயலட்சுமி வாழ்க :**

சென்ற **26-10-80** ஞாயிறு, காலை **7** மணியளவில், பொழில்வாய்ச்சி (பொள்ளாச்சி) செல்வன் **ப. செல்வதுரை,** க. இ.-க்கும் கோவை **க. விசயலட்சுமி,** அறி. இ.-க்கும், கோவை இராம் நகரில்,

---

(முன்பக்கத் தொடர்ச்சி

காக குற்றங் கூறிக் கொண்டிருப்பதும் குறை சொல்லிக் கொண்டிருப்பதும் தவறு. ஒரு விடுதலை இயக்கத்திற்கோ இந்நிலை மிக மிகத் தவறு. இத் தவறு விடுதலை இயக்கத்திற்கே ஊறுவிளைவிக்கக் கூடியது.

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

இனி, தலைமை இயக்க உறுப்பினர்களின் பொதுக் கருத்தைப் பெரிதும் மதித்து அவர்களின் மன நிறைவுடன் செயல்பட்டிருத்தல் வேண்டும். தலைமைக்கு வேண்டுவன, பிறர் கருத்துக்கு உரிய மதிப்பைத் தருவதும், அது பற்றி நேரில் கேட்கப் பெறுமானால் தம் கருத்துக்கு விளக்கம் சொல்லி ஏற்க வைப்பதும். அது போலவே தொண்டர்களுக்கு வேண்டுவது தலைமை மேல் நம்பிக்கையும் நன்றியும் வைப்பது.

இறுதியாக, தமிழீழ விடுதலை மூண்டு விட்ட ஊழிக்கனல். அதனை எவரும் குறைத்து மதிப்பிட்டு விட வேண்டாம். அறிந்தோ அறியாமலோ இயக்கத்திற்குள் ஏற்பட்ட கொள்கைப் பூசலை ஒரு பிளவாக மதித்து, அதில் எவரும் கையை விட்டுவிட வேண்டாம். அஃது அவர்களை ஆப்பை அசைத்த குரங்காக ஆக்கிவிடும் என்று எச்சரிக்கிறோம். வெல்க தமிழீழம்! வாழ்க தமிழீழ விடுதலைக் கூட்டணி!!

—**பெருஞ்சித்திரனார்.**

www.thamizham.net - Free E book No 7504

பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** தலைமையில் திருமணம் சீரும் சிறப்புமாக நடந்தேறியது. திருமணத்தில் அறிஞர் பலரும் தென்மொழி அன்பர்களும் கலந்து கொண்டனர். மணமக்கள் எல்லா நலனும் வளனும் பெற்று நீடு வாழ்கவென்று தென்மொழியும் வாழ்த்துகிறது.

## பொது நிகழ்ச்சிகள்

### 1. திருக்குறள் பேரவை 2-ஆவது மாநில மாநாடு :

சென்ற 11-10-80, 12-10-80 ஆகிய நாட்களில் வட ஆர்க்காடு மாவட்டம் திருமணிக்குன்றத்தில் (இரத்தினகிரியில்), திருக்குறள் பேரவை 2-ஆவது மாநில மாநாடு மிகவும் சீரும் சிறப்புடனும் நடைபெற்றது. முதல் நாள் நிகழ்ச்சியில், தவத்திரு. குன்றக்குடியடிகளார், பேரூர். சாந்தலிங்க அடிகளார், பாலமுருகன் அடிமை அடிகளார், திருக்குறள் முனிசாமி, ச. தண்டபாணி தேசிகர், ச. வே. சுப்பிரமணியனார், ஔவை நடராசன், சிங்காரவேலனார் முதலியோரும், இரண்டாம் நாள் நிகழ்ச்சியில், மதுரை சைவமடத் தலைவர், சட்டமன்றப் பேரவைத் தலைவர் க. இராசாராம், குமரி அனந்தன், வழக்குரைஞர் கு. ச. ஆனந்தம் முதலியோரும் கலந்து கொண்டனர். பாட்டரங்கம், பட்டிமன்றம், கருத்தரங்கம் ஆகியவை நடந்தன. தென்மொழியில் வந்த சாதி யொழிப்புத் திட்டக் கருத்தை யொட்டிய தீர்மானம் உள்பட மாநாட்டில் நாற்பத்தெட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

### 2. 'தென்மொழி அன்பர் குழு'—தொடக்கக் கூட்டம் :

கடந்த 19 10-80 ஞாயிறு காலை 10 மணியளவில் சென்னை, சைதை, திருநகர் குடியிருப்பு, பஃறுளி முன்றிலில் **தென்மொழி அன்பர் குழுக்** கூட்டம் தொடங்கப் பெற்றது. நிகழ்ச்சிக்குத் தென்மொழி **மறை. நித்தலின்பனா**ர் தலைமையேற்றுத் தொடக்க உரை நிகழ்த்தினார். கூட்டத்தில் 'அன்பர் குழுவின்' தலைவராக, **கதிர். உலகமுதல்வன்**, செயலராக, தென்மொழி **சோ. ஆற்றலரசு**, பொருளராக, தென்மொழி **பா. முருகவேள்** துணைச் செயலராக **மதுரை. முத்து**, மாணவ அமைப்பாளராக **மாதிறையன்** ஆகியோர் அமர்த்தப் பெற்றனர். கூட்டத்திற்கு மருத்துவர் கோவிந்தனார், குமர நடவரச ஈவப்பனார் மா. பூங்குன்றன், குழந்தைவேலன், குறளடியான், உதியஞ்சேரன், சேலம் பாவரசு, அழ. இளமுருகன், துரை. தென்னவன், முதலியோர் வந்திருந்து, தென்மொழி விரிவாக்கம் பற்றித் தம்தம் கருத்துகளை வழங்கினார்கள். திங்கள் தோறும் இரண்டாம் ஞாயிறு மாலை கடற்கரையில் கண்ணகி சிலை அருகில் தென்மொழியின் விரிவாக்கத் தொடர்பான வினைப்பாடுகள் பற்றிய கலந்துரையாடல் கூட்டம் நடத்துவதென்று முடிவு செய்யப் பெற்றது. கூட்டம் பகல் 1-45-க்கு முடிவுற்றது.

www.thamizham.net - Free E book No 7504

**3. திருக்குறள் மன்றம் — பல்லடம், சாதி ஒழிப்புக் கருத்தரங்கம் :**

17-8-80 ஞாயிறு காலை 10-00 மணிக்குப் பல்லடம் வெண்ணெய்க் கடைக் கட்டடத்தில் 'சாதி ஒழிப்புக் கொள்கையும் நடைமுறையும்' என்ற தலைப்பில் தென்மொழி **ந. முத்துக்குமரன்** தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. அவ்வமயம் பல்லடம் இளைஞர் மன்றச் சார்பில் திரு. அ. திருத்தொகையன் (தனசேகரன்), திரு. கி. பொன்னுச்சாமி ஆகியோரும், முசுலீம் இளைஞர் மன்றச் சார்பில் திரு. ம. அம்சத் அலி, தொலைபேசி நிலைய மனமகிழ் மன்றச் சார்பில் திரு. ப. வைரவசாமி, மற்றும் திருக்குறள் மன்ற உறுப்பினர்களும் பங்கேற்று உரையாற்றினர். தலைவர் தம் முடிவுரையில் சாதி, மத வேறுபாடுகள் மறைய வேண்டுமாயின் தமிழன் என்ற இனவுணர்வு வளர வேண்டுமென்று குறிப்பிட்டார். மன்றப் பொருளர் திரு. கி. சண்முகம் அவர்களின் நன்றியுரைக்குப் பின் கூட்டம் 2-00மணிக்கு நிறைவுற்றது.

**4. ஏரல், கொற்கைத் தமிழ் மன்றம் !**

கொற்கைத் தமிழ் மன்றத்தின் மூன்றும் ஆண்டு நிறைவு விழா 15-8-80முதல் 17-8-80 முடிய மூன்று நாட்கள் ஏரலில்,கடலூர் முது பெரும் புலவர் திரு. அ **நடேசனர்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு கருத்துரையாற்றினர். திருக்குறள் நினைவாற்றல், பேச்சுப் போட்டிகள் நடந்து மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன. மூன்று நாட்களிலும் தலைவரால் சிவஞான போத வகுப்பு நடத்தப் பெற்றது. வழக்காடு மன்றமும் நடந்தது.

**5. தனித்தமிழ்க் கழகம், புதுச்சேரி :**

புதுவைத் தனித்தமிழ்க் கழகச் செயற்குழு 13-9-80 அன்று கூடி, நிறைவேற்றப் பெற்ற தீர்மானங்களுள் ஒன்று வருமாறு: 'வானொலியில் வெள்ளிக்கிழமை தோறும் 'காந்தி அஞ்சலி' நடத்தப் பெறுவதைப் போல், ஒவ்வோர் அறிவன் (புதன்) கிழமையும் காலை 'குறளமுதம்' என்னும் பெயரில், திருவள்ளுவர் கருத்துகளை மக்களுக்கு நினைவூட்டுதல் வேண்டும்'. இத் தீர்மானத்தின் வேண்டுகோள்கள் புதுவை, தமிழக வானொலி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப் பெற்றன.

**9. ஈரோடு, சேசசாயி தாளாலைக் குடியிருப்பு திருவள்ளுவர் முத்தமிழ் மன்றம் — இலக்கியக் கூட்டம் :**

ஈரோடை, சேசசாயி தாளாலைக் குடியிருப்பு **'திருவள்ளுவர் முத்தமிழ் மன்றத்தின்'** 6-ஆவது இலக்கியக் கூட்டம், பாட்டரங்கமாக, கடந்த 31-8-80 ஞாயிறன்று நடைபெற்றது. பாவலர் திரு. **குரா. நடவரச சுவப்பனார்** அவர்கள் தலைமையில் திருவாளன்மார்

www.thamizham.net - Free E book No 7504

பா. தா. கோபாலன், சி. கமாலுதீன், ஆவத்தி வேங்கடாசலம், சு. தங்கவேலு, தமிழ்க்குமரன், தமிழடியான், கோவலன் ஆகியோரும் குடியிருப்பின் இளம் பாவலர்களும், 'நாட்டு முன்னேற்றத்தில் நம் பங்கு' என்னும் பொதுத் தலைப்பின் கீழ் மொழி, இன் வுணர்வு செழுமிய பாடல்களைப் பாடினர். விழா திரு. பனிமலைப் பதியன் அவர்களின் நன்றிப் பாவுடன் சிறப்புற முடிவெய்தியது.

**7. தமிழர் உரிமைக் கழகம், உரத்தநாடு — தொடக்க விழா :**

கடந்த 22-9-80 உரத்த நாட்டில், தமிழர் உரிமைக் கழகம் தோற்றுவிக்கப் பெற்றது. உரத்தநாடு நடுவண் பள்ளியில் நடந்த தொடக்க விழாவிற்கும் அறிஞர்கள் பிறந்த நாள் விழாவிற்கும், திரு, சாமி. தவிடன், அறி. இ. தலைமை யேற்றூர். திரு. இரா. பண்டரிநாதன், க. மு. வரவேற்புரையாற்றினுர். பேரா. திரு. ந. இராமநாதன். க. மு., புலவர் திரு. த. ச. தமிழனார், புலவர் திரு. தொல்காப்பியன், திரு. சி. அரசிறைவன், அறி. இ. ஆகியோர் பல் வேறு அறிஞர்களைப் பற்றிச் சிறப்புரையாற்றினர். திரு. ந. வை. இளஞ்செழியன் நன்றியுரையாற்றினுர்.

**8. நாரண துரைக்கண்ணன் நீடு வாழ்க :**

சென்ற 8-10-80, சென்னை, மயிலையில் கலைமாமணி, நாரண துரைக்கண்ணன் அவர்களின் 75-ஆவது பிறந்த நாள் விழாவும், திரு. வி. க. விருது பெற்றதற்கான பாராட்டு விழாவும் இனிதே நடை பெற்றது. திருவாளர்கள் ம. பொ. சி, அமைச்சர் இரா. மு. வீரப் பன், நெ. து. சுந்தரவடிவேலு, கு. இராசவேலு, அகிலன், குமரி அனந்தன், ப. நெடுமாறன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த் துரை வழங்கினர்.

**9. பழனியப்பன் — கலியாணி நீடு வாழ்க :**

திருச்சி, தென்மொழி விற்பனையாளரும், இளங்கோ புத்தக நிலைய உரிமையாளரும் ஆகிய திரு. அ. பழ. குமரப்பன் அவர்களின் மகன் **இளங்கோ** என்னும் **பழனியப்பனுக்கும்** மேலைச்சிவபுரி **கலியாணிக்கும்,** கடந்த 28-8-80-இல் மணமகள் இல்லத்தில் திரு மணம் சிறப்பாக நடைபெற்றது, திருமண மக்கள் நெடுநாள், மொழிக்கும் இனத்திற்கும் தொண்டுபல செய்து, சீரும் சிறப்பும் பெற்று இனிதே வாழ, தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்து கிறது.

## நன்கொடைகள்

1) சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் வி. மு. சோமசுந்தரம் அவர்கள் 18-8-80-இல் உரு. 25/-ஐ தென்மொழி வளர்ச்சிக்கென அன்பளிப்பாக விடுத்துள் ளார். அவர்க்கு எங்கள் அன்பு கலந்த நன்றி.

www.thamizham.net - Free E book No 7504

2) படைத்துறையைச் சார்ந்த மேகாலயா சாம்பசிவம் அவர்கள் 4-9-80 அன்று உரு. ஐந்தும், 4-10-80 அன்று உரு. ஐந்தும் அன்புடன் விடுக்கப் பெற்றுக் கொண்டோம். அவர்க்குத் தென்மொழி தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

3) கோவை, இரணியன் தென்மொழி வளர்ச்சிக்காக செப்தம்பர், அக்தோபர் மாத நன்கொடையாக விடுத்த உரு. 20/-ஐ நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். அவர்தம் அன்புள்ளத்தையும் தொண்டுள்ளத்தையும் மிகப் பாராட்டுகின்றோம்.

4) அண்ணாமலைநகர். அண்ணாமலைப் பல்கலைக் கழக வேளாண்மைக் கல்லூரியில் பயின்று வரும் இரா. கலியமூர்த்தி—செல்வி சோதிப்பிரியா (அறி. மு.) அவர்கள் 16-9-80-இல் நடைபெற்ற தங்களுடைய திருமண நினைவாக விடுத்த நன்கொடை உரு. 5/-ஐ வரப்பெற்றோம். மணமக்கள் எல்லா வளமும் நலனும் பெற்று வாழத் தென்மொழி உளமார வாழ்த்துகிறது.

5) மலேசியா, தென்மொழி அன்பர் பொன். சுப்பிரமணியம் அவர்கள் 5-9-80-இல் தம் தம்பி பொன். பரிதிவண்ணன் வழி நேரில் தென்மொழி வளர்ச்சிக்கென அன்பளிப்பாகக் கொடுத்த உரு. 20/-ஐ நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். அவர்தம் பொதுநல உணர்வைப் பாராட்டுகிறோம்.

6) ஈரோடு-1 துரை. சம்பத்துகுமார் அவர்கள் தென்மொழி வளர்ச்சிக்காக உரு. 20-76 காசு பணவிடை வழி 17-9-80-இல் அன்பளிப்பாக விடுத்தார்கள். அவர்க்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொளகிறோம்.

7) கோவை, கோபிசெட்டிபாளையம், தொலைபேசி நிலைய இளநிலைப் பொறியாளர் நிலா-சீவங்கடவன் அவர்களின் துணைவியார் சிலம்புச் செல்வி கடந்த 21-5-80 அன்று கோபியில் பெண் மகவு ஒன்றினை ஈன்றெடுத்ததன் நினைவாகவும் அம்மகவிற்கு 'அறிவுமலர்' எனப் பெயரிட்டதன் நினைவாகவும் தென்மொழி வளர்ச்சிக்கு உரு. 23/- நன்கொடையாக வரப்பெற்றோம். அறிவு மலர் பல்லாற்றானும் நீடுழி வாழ, தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

8) கோவை மாவட்டம் புன்செய்ப் புளியம்பட்டி அரசு மேனிலைப் பள்ளித் தமிழாசிரியர் புலவர் கா. இளமுருகன், க.மு.ஆ.ப. அவர்கள் தென்மொழி வளர்ச்சிக்கென உரு. 25-ஐ 27-9-80-இல் விடுத்துள்ளார்கள். அவர்களது தொண்டுள்ளத்தைப் பாராட்டுகிறோம்.

9) சேலம், தாதகாப்பட்டி கு. பழ. சதாசிவம் அவர்கள் தென்மொழி வளர்ச்சிக்கு உரு. 5/ ஐ 6-10-80-இல் விடுத்துள்ளார். அவர்க்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

www.thamizham.net - Free E book No 7504

இம் மாதச் சிறப்பு மடல்-1

## வெளிநாட்டுத் தூதரகங்களில் இந்தி

தமிழ்ப் பணியாற்றும் பெருந்தகையீர், தமிழினத்தைப் பெருந் தீங்கு சூழ்ந்து விட்டது. தமிழினத்திற்கும், அவர்தம் மொழிக்கும், பிற நலன்களுக்கும் பாதுகாப்பு என்று மாறி மாறிக் கூறிப் பெருமையடித்துக் கொள்ளும் தி. மு. க, அ. தி. மு. க. கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களில் ஆங்கில மொழி பயன்படுத்துவதை விட்டு எவ்வளவில் இந்தி மொழியைப் பயன்படுத்துகிறார்கள் என்று மதிப்பிட்டு, இந்திய அரசுக்கு அறிக்கை அளிக்க வெளிநாடுகளுக்கு இந்திய அரசால் அனுப்பப்பட்டுள்ள பாராளுமன்ற குழுவில் சேர்ந்து சுற்றுலாச் சென்றுள்ளார்களாம் (இந்தியன் எக்சுபிரசு—10-10-1980 மதுரைப் பதிப்பு). வேலியே பயிரை மேய்கிறது! இரு கழக மேலிட இசைவின்றியா அதன தன் உறுப்பினர்கள் இந்திச் சுற்றுலாச் (Hindi Jaunt) சென்றிருப்பார்கள்? தமிழும் ஆங்கிலமும் என்ற இரு மொழிக் கொள்கையுடைய இரு கழகத் தலைமைகளும் எப்படித் தங்கள் பா. உ.க்களை இந்திச் சுற்றுலாவில் பங்கு கொள்ள இசைந்தன? வெளிநாட்டுத் தூதரகங்களில் இந்தியை ஆங்கிலத்துக்குப் பகரமாக நிரப்பும் நடுவண அரசு திட்டத்தால் இந்தியாவின்உள்ளேயும் வெளியேயும் வாழும் தமிழர் நலன் தாக்குறுதா? தமிழையும் ஆங்கிலத்தையும் கற்கும் தமிழ்நாட்டுத் தமிழருக்கு எப்படி இந்திய வெளிநாட்டுத் பணியில் (Indian Foreign Service) பங்கு கிடைக்கும்? இந்தியையும் ஆங்கிலத்தையும் கற்கும் இந்தி மாநிலத்தவனன்றோ எளிதில் இடம் பெற்று, அத்துறையில் முன்னேறுவான். வெளிநாட்டில் வாழும் இலக்கக்கணக்கான தமிழர் தங்களுக்கு ஏதாவது இந்தியத் தூதுவரகத்தில் கிடைக்க வேண்டும் என்றால் எப்படிப் பயனடைவர். வெளிநாட்டு மக்களாகவே வாழும் தமிழர் இப்பொழுதுதான் தமிழை மெல்ல மெல்ல கற்கத் தொடங்கியுள்ளனர். இனி இந்திய தூதுவரகங்களில் உதவியோ கருத்துரைகளோ பெற இந்தி தெரியவேண்டும் என்றால், அவர்களுக்கு இந்தியையே கற்றுக் கொள்ளலாம் என்ற எண்ணம் ஏற்படுவது இயல்புதானே. இந்திச் சுற்றுலாக் குழு தலைவர் திரு. சிரன்சிலால் சர்மா பாரிசில் கூறிய "இந்திதான் பயன்படுத்தப்படும்" என்ற கருத்தை யொட்டி நமக்கென ஒரு நாடு அமைப்பதே நம் நலன்களுக்கு முழுப் பாதுகாப்பு என்ற எண்ணம் வலுப்பெறுகின்றது.

—ப. பத்மநாபன், க. மு, ச. இ., சோமனூர், கோவை.

இம் மாதச் சிறப்பு மடல்-2

## மக்களுக்கு உணர்வூட்ட வேண்டும்

அளவு காண முடியா அறிவுக் கடலின்கண் மூழ்கி அதன் வழி மூச்சுயிர்க்கும் பாவலரேறு ஐயா, வணக்கம் பல.

www.thamizham.net - Free E book No 7504

சென்ற இதழில் வெளியான "தென்மொழி இயக்க"—அறிக்கை-1-ஐக் கண்ணுற்றபின், என் நரம்புகள் பூறிப்பொடு புடைத்தன. என் உணர்வுகள் வெம்பித் தணிந்தன. விடுதலைக் கான நாள் என்று வருமோ, தோளுக்குத் தோள் கொடுத்து என்று போராடப் போகிறோமோ—அந்த உணர்வுகள் என் நெஞ்சாங்குலை யின் விரைவைப் பன் மடங்கு உயர்த்தின. ஆயினும் மறுமுனையைக் கண்ணுற்று என் கண்கள் கலங்கின.

ஐயா—தமிழக மக்களிடை தந்நல உணர்வு பெருகிக்கொண்டே வருகிறது. அவர்கள் தங்கள் மொழியைப் பற்றியே எண்ணாத இந் நாளில், எங்கு இனத்தைப் பற்றி நினைக்கப் போகின்றனர்? உண்ப தற்கும், உடை அணிவதற்கும் காட்டும் நாட்டம் அவர்களின் மொழி மீது இல்லை.

ஐயா—தென்மொழி பயில்கின்ற சில ஆயிரத்தினருள் ஆயிரம் பேர் விடுதலை உணர்வு கொண்டவரெனில், விடுதலைக்காகப் பாடு படத் துணிந்த ஓர் ஐம்பது பேரை வைத்துக் கொண்டு, தாங்கள் இயக்கம் தொடங்கி அதன் வழிப் போராடத் துணிந்ததை எண்ணி இரங்க வேண்டியுள்ளது. அந்த ஐம்பது பேரையும் பிடித்துச் சிறை யில் போட்டு விட்டு, இக்கால் தமிழகத்தில் தமிழுக்காக, தமிழனுக் காகப் பாடுபடும் ஒரே இதழ் 'தென்மொழி'யினையும் தடைப்படுத்தி விட்டால்—அதன் பின் உங்கள் வழியில் செயல்பட எவர் உளர்? அதன் பிறகு எந்தப் பட்டித் தொட்டியில் 'விடுதலை பெற்ற தமிழகம் வேண்டும்'—எனும் குரல் எழுப்பப் பெறும்?—வேண்டுமெனில் 'பாவலரேறுவை விடுதலை செய்க!'—என்று இரவோடு இரவாகச் சுவரொட்டி ஒட்டிவிட்டு ஒளிந்து கொள்கிற தொடை நடுங்கிகள் இருப்பார்கள்!

ஐயா—இதன் வழி நம்மின் இயலாமையை நாம் எளிதில் அவர் களுக்குப் புலப்படுத்திவிடுவது போன்றாகி விடும்—தமிழனை முன் னேற்ற வேண்டும்—**அதற்கு ஒரே வழி தமிழனுக்கு அறிவு புகட்ட வேண்டும்—அவனின் அறியாமையை நீக்க வேண்டும்.**

மாநாடு போடுவதாலோ, போராட்டம் செய்வதாலோ இப் பொழுது எந்தப் பயனும் ஏற்பட்டுவிடாது. ஊர்வலம் நடத்துவது மூலம் தடைப்படும் இரண்டு மணி நேரப் போக்குவரவுத் தடங்கலோ அன்றி இரண்டு மணி நேரப் போராட்ட உரைகளோ, வீர முழக்கங் களோ—பிறர் மனத்தை திருத்துவதாகவோ, அன்றித் தமிழன் தன் மான உணர்வை உணர்ந்து கொள்ள அமைவதாகவோ கூறிவிட முடியாது.

நூறாயிரம் திரை யிதழ்களும், நூற்றுக்கணக்கான கூத்தாட்டுப் படங்களும் வந்து கொண்டிருக்கின்ற இந்நாட்களுக்கிடையில், தென்மொழியில் வருகிற உங்களது எட்டுப் பக்க ஆசிரியவுரை

www.thamizham.net - Free E book No 7504

# தென்மொழி இயக்கம் - அறிக்கை - 1.

ஆங்காங்குள்ள '**தென்மொழி**' அன்பர்களை ஒருங்கிணைத்து ஓர் இயக்கம் தொடங்க வேண்டும் என்பதாக, அன்பர்கள் பலரும் எமக்கு மடல்கள் வழி எழுதியும் நேரில் கருத்தறிவித்தும் வந்திருக்கின்றனர். தென்மொழிக் கொள்கைகளை முன் வைத்து ஓர் இயக்கமாகச் செயற்படுவதில் உள்ள பல்வேறு வகையான இடர்ப்பாடுகளையும் பொருளியல் நிலைகளையும் கருதி, அதுபோலும் ஓர் இயக்கத்தைத் தொடங்குதற்கு இதுநாள் வரை, பெரிதும் தயங்கி வந்தோம். ஆனால் இக்கால் அவ்வெண்ணத்தைச் செயல்படுத்தும்படி, மீண்டும் சென்னையிலுள்ள அன்பர்கள் சிலரும் வெளியூர் அன்பர்கள் பலரும் மிகவும் வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

எனவே, இதன் முதற்கட்டமாக இவ்வறிவிப்பை வெளியிட வேண்டுவதாயிற்று.

தென்மொழியின் மூன்று கொள்கைகளான மொழி முன்னேற்றம், இன முன்னேற்றம், நாட்டு விடுதலை ஆகிய மூன்றையும் முன் வைத்து ஓர் இயக்கம் தொடங்குவதானால், இதில் ஈடுபடுவதற்கு அரசுப் பணியிலுள்ள சிலர் தயங்கலாம். முதலிரண்டு கொள்கைகளுக்காகப் பலர் இதில் ஈடுபட விரும்பி, வெளிப்படையாக உழைக்க எண்ணினாலும், மூன்றாவது கொள்கையான நாட்டு விடுதலைக் கொள்கைக்கென ஈடுபட விரும்புவார் மிகக் குறைந்த

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கேடுகெட்ட தமிழ் மக்களிடை எந்த உணர்வை ஏற்படுத்தி விடும் என்று விளங்கவில்லை. முறையான கருத்து வெளிப்பாடு இல்லையெனில், தமிழக விடுதலை உணர்வுக்கான நம் உணர்வை இத்துடன் முடித்துக்கொள்ள வேண்டியதுதான்.

ஈழத்திலிருந்து வெளிவரும், 'சுதந்திரன்'—அளவிலோ அன்றி, வேறு தாங்கள் விரும்பிய அளவிலோ, கிழமைக்கு ஒன்றாக செய்தியிதழ் ஒன்று வெளியிட வேண்டும். அது பட்டிதொட்டி எங்கும் செல்ல வேண்டும். எங்கெங்கு அந்த இதழ் செல்கின்றதோ—அங்கெல்லாம் கொள்கை பரப்புக் கூட்டங்கள் போடவேண்டும். அதற்கான முயற்சியில் தென்மொழி இயக்கத் தற்பொழுதைய மறவர்களை ஈடுபடுத்துங்கள். தமிழன் தமிழகத்தில் எந்தெந்த அளவில் தாழ்த்தப் பெறுகிறான்; அவன் இனம் எந்தெந்த அளவில் ஒழிக்கப் பெறுகிறது என்ற உண்மைகளை இத் தமிழ் மக்கள் உணரும்படி அந்த இதழும், கூட்டமும் அமைய வேண்டும். ஒவ்வொருவர் உள்ளத்திலும் 'நாம் தமிழர்கள்' என்ற உணர்வை ஊட்ட வேண்டும்.

அப்பொழுதுதான் நாம் நினைக்கின்ற பொதுமைநல நோக்கு கொண்ட புதிய தமிழ் நிலத்தை உருவாக்க முடியும்.

வாழ்க தமிழகம்! விடிக தனித்தமிழ்நாடு!

—'**விடுதலை அரிமா**'—சென்னை 35

www.thamizham.net - Free E book No 7504

எண்ணிக்கையினராகவே இருப்பர். மூன்றாவதைக் கருதி முன்னிரண்டிலும் கூட ஈடுபடுவதற்குப் பலரும் தயக்கம் காட்டலாம். எனவே, இது பற்றி முதல் முயற்சியாக, ஆங்காங்குள்ள அன்பர்கள் கருத்துகளைத் தெளிவாக அறிய விரும்புகின்றோம்.

ஆகவே, தென்மொழி இயக்கம் ஒன்று தொடங்கலாம் என்னும் முதல் கருத்து தொடங்கி, முடிவான சில கருத்துகளையும் அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் கீழே சில வினாக்கள் கொடுக்கப் பெறுகின்றன. அவற்றுக்கான விடைகளை அன்பர்கள் தனித்தனியாக ஒரு தனித் தாளில் எழுதி **'பொறுப்பாசிரியர் தென்மொழி'** என்னும் முகவரிக்கு விடுக்க வேண்டுகிறோம். வரும் விடைகள் கணிசமான அளவிற்கு இயக்கத் தொடக்கத்திற்குச் சார்பாக விருக்குமானால், இயக்க அமைப்பு மாநாட்டை வரும் 1981 - சனவரியில் சென்னையில் வைத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறோம். வரும் விடைகள் இயக்கத் தொடக்கத்திற்குச் சார்பாக அமையவில்லையானால், இயக்கத் தொடக்கத்தை இன்னும் சில காலத்திற்குத் தள்ளிப் போடலாம். வரும் கருத்துகளை ஆய்வு செய்யவும், அவற்றின் அடிப்படையில் ஒரு முடிவு செய்யவும் ஒரு குழு அமைக்கப் பெற விருக்கிறது. அக் குழுவில் யார் யார் உறுப்பினராக அமைவார்கள் என்பது பற்றி அடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பெறும்.

எனவே பொதுநலமும் தமிழின முன்னேற்றமும் கருதி இவ் வறிக்கையைக் கண்ணுறும் அன்பர்கள், இது பற்றிப் பிறரிடமும் கூறி, இங்குத் தரப்பெறும் வினாக்களுக்குத்; தவறாது, உடனடியாக விடைகளை எழுதி விடுக்கவும், விடுக்கும்படி செய்யவும் கேட்டுக் கொள்கிறோம்.

தென்மொழியின் மூன்று கொள்கைகள் தெளிவாக இங்குத் தரப் பெறுகின்றன.

1. **மொழி நிலையில்,** தூய தமிழ் வளர்ச்சியும் மலர்ச்சியும், அதனடிப்படையில் அமைந்த நல்ல இலக்கிய ஆக்கமும், மக்களுக்கு அறிவூட்டக்கூடிய அறிவியல், வரலாறு, வாழ்வியல், கலை பண்பாடு இவற்றின் நூலாக்கங்களும், அவற்றுக்கென உழைத்தலும்.

2. **இன நிலையில்,** சாதிகள் அறவே இல்லாத பொதுமைக் குமுகாய அமைப்புடையதும், பொருளியல் ஏற்றத் தாழ்வற்ற பொதுநிலைச் சமவுடைமைக் கோட்பாடுகளைக் கொண்டதுமான ஒரு மக்களமைப்பை உருவாக்குவதும், அதற்கென உழைத்தலும். (அம் மக்களமைப்பில் சமய உணர்வு அவரவர்களின் மன விருப்பத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும் தக்கபடி அமைய வேண்டுவதால், பொது நிலைக் குமுகாய அமைப்புக்கும் வளர்ச்சிக்கும் அது தொடர்புடையதாக இல்லாமல் இருக்கும். வெளிப்படையான சமய வினைகள் தடுக்கப் பெறும்.)

www.thamizham.net - Free E book No 7504

3. **நாட்டு நிலை**யில், மொழி, இலக்கிய. கலை, பண்பாடு இவற்றின் அடிப்படையில், மரபு வழிப்பட்டு வளர்ந்து வரும் தேசிய இனங்களின் நில விடுதலையே, உலகின் பொதுநிலை அரசியல் அமைதிக்கான வழியாகலின், தமிழ்த் தேசிய நாட்டின் அமைப்பின் கீழ், தமிழ்நாடு விடுதலை பெறுவதற்கும், தனித் தமிழ் நாடு அமைப்பதற்கும் உழைப்பது.

இம் மூன்று கொள்கைகளின் அடிப்படையில், அறிவறிந்த—தொண்டார்வம் கொண்ட மக்களின் கருத்துகளைத் தெரிவிப்பதற்கான விழைப்படிவம் கீழே தரப் பெறுகின்றது. அதனை வேறு வெள்ளைத் தாளில் படியெடுத்து. நிறைவு செய்து விரைந்து விடுத்தல் வேண்டும்.

## தென்மொழி இயக்க அமைப்பு பற்றிய விழைப் படிவம்

1. பெயர், முகவரி,
   (தெளிவாக)
2. அகவை/மணமானவர்/மணவாதவர் :
3. தென்மொழி இயக்கக் கொள்கைகளைப் படித்தீர்களா? அவற்றை ஒப்புகிறீர்களா?
4. தென்மொழி இயக்க மூன்று கொள்கைகளில், எக் கொள்கைக்காக நீங்கள் ஈடுபட்டு உழைக்க அல்லது தொண்டாற்ற விரும்புகிறீர்கள்?
5. நீங்கள் விழை 4-இல் குறிப்பிட்ட கொள்கை அல்லது கொள்கைகளுக்காக எந்த முறையில் உழைக்க விரும்புகிறீர்கள்?

   (1) அமைதியாக (2) போராட்ட முறையில், (3) வன்முறையில்
6. தங்களுக்குப் பேச்சு வன்மை/எழுத்து வன்மை/செயல் வன்மை — எதில் ஈடுபாடு உண்டு.
7. இதுவரை தாங்கள் செய்த இலக்கியப்பணி/பொதுப்பணி கட்சிப் பணி/எந்த அளவில்? (விளக்கமாகக் குறிப்பிடவும்)
8. தாங்கள் பொதுத் தொண்டு காரணியமாகச் சிறை சென்றதுண்டா? (விளக்கம் தருக) சிறை செல்ல அணியமா?
9. தாங்கள் தென்மொழி இயக்கத்தில் பொறுப்பான பதவிகள் வேண்டுவீர்களா? தந்தால் ஏற்பீர்களா?
10. தங்களை யறிந்த இருவர் முகவரிகள் : 1)
    2)

நாள் :  கையொப்பம்.

www.thamizham.net - Free E book No 7504

# குறளைப் பழிக்கும் பேராசிரியர்!

—க. தமிழமல்லன், க. இ

திருக்குறளைப் பற்றியும் தனித்தமிழ் பற்றியும் தன்மூப்பான தன்மையில் கருத்துகளைக் கூறுவது பகுத்தறிவுப் போர்வையுள் தம்மைப் பொதிந்து கொண்ட சிலர்க்குப் பொழுது போக்காகி விட்டது. இதனால் அவர்களுக்கோ அவர்கள் பார்க்கின்ற தொழிலுக்கோ சிறிதும் பயனில்லை என்பதை உணராமற்போனது மிகவும் வருந்தத்தக்கது

'மண்ணில் தோன்றிய மரங்களில்தாம் சுவையான பழங்களும் உண்டாகின்றன. எப்பழமானாலும் அது சொத்தையாவதும் அதில் பூச்சியிருப்பதும் இயல்புதான். வேலை மெனக்கெட்டு அந்தச் சொத்தைகளைக் கீறி எறிந்துவிட்டுப் பூச்சிகளைத் தூக்கிப் போட்டு விட்டுப் பழங்களைச் சாப்பிட வேண்டியதில்லை. பழந் தின்னுபவரைப் பொறுத்தவரை, இது வேலையற்ற வேலை!'

'நிலத்திலிருந்து தானே நெல் விளைகிறது. நெல்லிலிருந்து தானே அரிசி கிடைக்கிறது. அந்த அரிசியில் கல்லும் மண்ணும் கலந்திருந்தால் என்ன? வேலை மெனக்கெட்டு அந்தக் கல்லையும் மண்ணையும் புடைத்துக் கொழித்து நீக்க வேண்டுவதில்லை. சோறு தின்பவரைப் பொறுத்தவரை, இது வேலையற்ற வேலை.'

இப்படித்தான் சாலை—இளந்திரையன் 'மனித வாழ்வைப் பற்றிப் பேசும் இலக்கியப் படைப்புகளிலும் அந்தச் சிறிய கலப்பு இயல்பாகவே ஏற்படுகிறது. வேலை மெனக்கெட்டு, அந்தச் சொற்களைத் தேடி அகற்றி, வேறு சொற்கள் போட்டு நிரப்ப வேண்டியதில்லை. படைப்பிலக்கிய வாணனைப் பொறுத்தவரை, இது வேலையற்ற வேலை' என்று கூறுகிறார்.

பண்டாரகர்ப் பட்டம் பெற்ற தமிழ்ப் பேராசிரியர் ஒருவரா இப்படிக் கூறுவது? இலக்கணத்தோடு எழுதப்படுகிற பாடல்களைக் கையாலாகாத, புது மடக்குரையாளர்கள் (புதுக் கவிதையாளர்) பழிப்பது போலவும், அரிசியைக் கல் களைந்து சமைக்கத் தயங்கும் சோம்பேறி அரிசியைப் பொருத்தி அப்படியே சமைக்கலாம் என்று கூறுவது போலவுமன்றோ இளந்திரையர் கூறுகின்றார்!

தனித்தமிழில் எழுதுகின்றவர்கள் எல்லாம் 'வேலை மெனக்கெட்டு'ப் பிற சொற்களைத் தேடி அகற்றிக் கொண்டா இருக்கிறார்கள்? இவர் அப்படி முயன்று பார்த்தாரோ என்னவோ? தனித்தமிழில் இயல்பாக எழுதுகின்றார்கள், பேசுகின்றார்கள்? தில்லியிலே 'தமிழ் பரப்பும்' சாலையர்க்கு இது தெரியாதோ என்னவோ?

வேலை மெனக்கெட்டு, வேண்டுமென்றே கதை எழுதும் 'அறிவாளிகள்' அவர்களின் கதைகளில் ஆங்கிலத் தொடர்களை அதே

www.thamizham.net - Free E book No 7504

எழுத்துகளில் கூட எழுதித் தள்ளுகிற போக்கை வன்மையாகக் கண்டிக்கவேண்டிய பேராசிரியர், தான் பரிந்து பேச வேண்டிய—கடைப்பிடித்துக் காட்ட வேண்டிய தனித்தமிழ்ப் பற்றி அரை மனத்துடன் கூறுவதோ மிகவும் இரங்கத்தக்கது!

'உங்கள் படைப்புகளில் பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளனவே அவற்றைத் தவிர்க்க முயலாதா?' என்ற வினவுக்குச் சாலையார், 'என்னால் தவிர்க்க இயலவில்லை' என்று தமது இயலாமையைச் சரியாய் ஒப்புக்கொண்டிருந்தால் நாம் அவரைப் பாராட்டியிருக்கலாம்!

தனித்தமிழின் தேவை, நயன்மை ஆகியவை பற்றி மறைமலையடிகளார் முதல் தமிழறிஞர் பலர் தெளிவுபடுத்தியுள்ளனர். அவர்களின் துணைக் கொண்டு இவர் தெளிவு பெறுவது விருப்பத்தக்கது!

'மக்களைத் தட்டி எழுப்பி அவர்களைச் சிறந்த வாழ்க்கைத் தளத்துக்கு உயர்த்த முடியாத ஒரு புத்தகம் வேறு எந்த இடத்தில் வைக்கத் தகுதியுடையது?'

'குறளை மட்டுமன்று, பழைய நூல்கள் என்று சொல்லப்படுபவைகளை எல்லாமே அரும்பொருட் காட்சியகத்தில் ஒதுக்கி வைக்க வேண்டும் என்பதே என் கருத்து' என்றும் இளந்திரையர் நேரில் உரைத்ததாகத் '**தமிழியக்கம்**' எனும் இதழ் (1-9-80) கூறுகிறது.

இளந்திரையன் பல நூல்களை எழுதியுள்ளார். **இவர் எழுதியுள்ள நூல்கள் எந்த அளவுக்கு மக்களைத் தட்டி எழுப்பி மக்களைச் சிறந்த வாழ்க்கைத் தளத்துக்கு உயர்த்தியிருக்கின்றன?** என்ற வினவுக்கு விடை கூறுவாரா? அன்றி, இவர்தாம் மக்களை எந்த அளவுக்குத் தட்டி எழுப்பி மக்களைச் சிறந்த வாழ்க்கைத் தளத்துக்கு உயர்த்தியிருக்கிறார்?

இவருடைய கருத்துப்படி, **இவர் எழுதிய நூல்களையும் இவரையுஞ் சேர்த்து அரும்பொருட் காட்சியகத்தில்**தான ஒதுக்கி வைக்க வேண்டுமன்றோ?

'இமயம் முதல், குமரி வரை, இந்தியா எங்கும் காணப்படும் 'பிச்சைக்காரர்களி'ல் பெரும்பாலோர் குறளுக்கு உரிமை படைத்த தமிழர்கள்' என்கிறார் இளந்திரையர். தமிழர்கள் இரந்து வாழ்வதற்குக் குறளா காரணியம்?

**'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்.'**

என்றறைந்த திருக்குறள், தமிழர்கள் இரந்து வாழ எங்ஙனம்

www.thamizham.net - Free E book No 7504

கரணியமாகும்? சொல்லப்போனால்—இளந்திரையனைப் போன்றோர் திருக்குறளை இழித்தும் பழித்தும் பேசுவதும், அதனை முறையாக மக்களுக்குச் சொல்லாமையுந்தாம் தமிழர்கள் இரந்து வாழ்வதற் குரிய கரணியங்களுள் ஒன்றாகும்.

குறள் போன்ற ஒரு பழைய நூலைப் பெற்றிராத பஞ்சாபியரில் ஒரே ஒருவன் கூட இரந்து வாழ்வதில்லை' என்றால் அங்கே இளந் திரையர் போலப் பாழ் செய்யும் பல்குழு மனப்பான்மை கொண்ட வர்கள் நிரம்பி யில்லாமையுங் கரணியமாகும்.

எல்லார்க்கும் கற்கும் உரிமையில்லை, 'சூத்திரர் வேதத்தைக் காதால் கேட்டால் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டும்; நாவால் கூறினால் இரும்பு ஆணியைப் பழுக்கக் காய்ச்சி அவன் நாவில் செருக வேண்டும் என்று மனுநெறி கூறிய ஒரு காலத்தில். **'எல்லாரும் கல்வி கற்கவேண்டும், கற்றவரே கண்ணுடையார், கல்லாதார் முகத்திரண்டு புண்ணுடையார்; சாகும் வரை ஒருவன் கல்வி கற்றுக்கொண்டே இருத்தல் வேண்டும்—கற்றால் மட்டும் போதாது—அதற்குத் தக ஒழுகவேண்டும்; ஒவ்வொரு தந்தையும் தம் மக்களை அவையில் (கல்வியளித்து) முந்தியிருக்குமாறு செய்ய வேண்டும். தம்மை விடத் தம் மக்கள் அறிவிற் சிறத்தல் உலகுக்கெல்லாம் நன்மையாகும்'** என்றெல்லாம் மக்கள் வாழ்க்கை சிறக்கக் குறள் படைத்தார் வள்ளுவப் பெருந்தகை. பிறவியில் வேறுபாடு கற்பித்தல். வேள்வி செய்தல், போலித் துறவு, குமுகாயக் குற்றங்கள், கொடுங்கோன்மை போன்றவற்றை எதிர்த்தது திருக்குறள்.

இத்தகைய திருக்குறளையும் கற்றுத் தேர்ந்து, அதை மாணவர் களுக்குச் சொல்லிக் கொடுத்துத் தமிழால் மட்டுமே சம்பளம் பெற்று வாழ்ந்து வரும் இளந்திரையர், திருக்குறளை அரும்பொருட் காட்சி யகத்தில் வைக்குமாறு சொல்வது மிகவும் இரங்கத் தக்கது! வன்மையாகக் கண்டிக்கத் தக்கது!

தமிழினம் ஒன்றுபட வேண்டிய மிகவும் இடர்ப்பாடான இக் கால நெருக்கடியில் தமிழர் இன உரிமை நாடும் திருக்குறள் பற்றி யும் தனித்தமிழ் பற்றியும் கருத்தறிவிக்கும் எவரும் நாவடக்கத் துடன் இருத்தல் நாட்டுக்கு நல்லது!

முரண்பட்ட மூலைகளில் அவரவர் ஒதுங்கியிராமல் உரன் கொண்ட நெஞ்சோடு உருப்படியான பணிகளில் அறிவுடையார் ஈடுபடுதலே சிறைப்பட்ட தமிழினத்தை விடுவிக்கும்!

www.thamizham.net - Free E book No 7504

# தமிழ்ப் பேரரசு

—சி. பா. ஆதித்தனார்.

## 11. குறள் கண்ட அரசு

திருவள்ளுவர் வகுத்த அரசுதான் 'உரிமைத் தமிழ் அரசு' ஆகும்.

தமிழர்களின் பண்பாட்டுக்குப் பொருத்தமான ஆட்சி, எப்படிப் பட்டதாக இருக்க வேண்டும் என்று திருவள்ளுவர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

### படை, உறவு!

'அரசு' என்றால், அதற்கு இலக்கணம் என்ன என்பது திருக்குறளில் கூறப்பட்டு இருக்கிறது. முதலில் அந்த அரசுக்கு ஆதரவாக தகுந்த படை இருக்க வேண்டும். அந்த அரசுக்கு வெளிநாடுகளுடன் தொடர்பும், நட்பும் வேண்டும்.

ஆகையால்தான் படை, உறவு ஆகிய இரண்டையும் ஓர் ஆட்சியின் முகாமை உறுப்புகள் என்று வள்ளுவர் வகுத்துள்ளார். ஆகவே, படையையும், வெளிநாட்டு உறவையும் தில்லி அரசிடம் ஒப்படைத்துவிட்டுத் தமிழ்நாட்டில் ஓர் அரசு நடக்குமானால், அது 'தமிழ் அரசு' அன்று.

### குருட்டு அரசு!

தமிழ் அரசு ஏற்படுகிற காலத்தில், அந்த அரசுக்குத், தமிழ் வீரர்கள் அடங்கிய படைத்துறையும். தமிழர்களே தூதுவர்களாக வெளிநாடுகளுக்குப் போகிற அதிகாரமும் இருத்தல் வேண்டும். இந்த இரண்டு அதிகாரங்களும் இல்லாமல், தமிழ்நாட்டில் ஏற்படுகிற அரசு, வள்ளுவர் வகுத்த 'தமிழ் அரசு' ஆகாது! இரண்டு கண்களும் இல்லாத 'குருட்டு அரசு' என்று அதைச் சொல்ல முடியுமே ஒழிய, 'தமிழ் அரசு' என்று சொல்ல முடியாது!

### பசி ஒழிக்கும் திட்டம்

திருவள்ளுவர் கூறிய 'தமிழ் அரசு' இந்த நாட்டில் ஏற்படுமானால், பசி என்பதே தமிழ்நாட்டில் இருக்காது. 'உறு பசியும் ஓவாப் பிணியும்...சேராது இயல்வது நாடு' என்பது திறக்குறள்.

நாட்டில் பசி இல்லாமல் இருக்க வேண்டும் என்றால், (1) குழந்தைகளை வளர்க்க முடியாமல் அவதிப்படுகிற பெற்றோருக்கு அரசு 'குழந்தை வளர்ப்புப் பணம்' கொடுத்து உதவ வேண்டும். (2) பள்ளிக்கூடத்தில் ஆண், பெண் எல்லாப் பிள்ளைகளுக்கும்

www.thamizham.net - Free E book No.7504

இலவசமாகச் சோறு போட வேண்டும். (3) படிப்பு முடிந்ததும் எல்லோருக்கும் 'வேலை அல்லது சோறு' என்ற பொறுப்பை அரசு ஏற்கவேண்டும். (4) அகவையான பின், அவர்களுக்கு சோறு போடுகிற பொறுப்பையும் அரசு ஏற்க வேண்டும்.

மேற்கண்ட 4 பொறுப்புகளையும் எந்த அரசு ஏற்றுக்கொள்ளுகிறதோ, அதுதான் வள்ளுவர் கண்ட அரசு ஆகும். தொட்டிலில் இருந்து சுடுகாடு வரை மக்கள் பசி அற்று வாழுகிற தமிழ் அரசில், மேற்கண்ட பொறுப்புகளை அரசு ஏற்றுக்கொள்ளும்.

**வெயர்வை சிந்தும் கடின உழைப்பு**

மேலும், மிகவும் கடுமையாக, அஃதாவது திறனை மீறிய உழைப்பு உழைத்துத்தான், ஒருவன் வயிறு வளர்க்க வேண்டும் — என்ற நிலைமை இருக்குமானால், அது 'தமிழ் அரசு' ஆகாது! கடினமான உழைப்பு உழைக்க வேண்டும் என்ற நிலைமை ஒரு நாட்டில் ஏற்படுமானால், அது 'நாடு அன்று' என்று வள்ளுவர் கூறி உள்ளார்.

மிகவும் பளுவான மூட்டைகளைத் தூக்கி உழைப்பது, பாரத்தை ஏற்றிய வண்டிகளை மாந்தர்கள் இழுப்பது, நாள் ஒன்றுக்கு 8 மணி நேரத்துக்கு மேல் நிலத்திலோ அல்லது ஆலையிலோ வெயர்வையைச் சிந்துவது—இப்படிப்பட்ட கடினமான வேலைகளை மக்கள் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படக் கூடாது.

கடினமான உழைப்புகளை எந்திரங்கள் செய்ய வேண்டும். மாந்தன், கட்டுக்கு அடங்கிய உழைப்பைச் செய்து, ஓய்வு நேரத்தில் ஓரளவு இன்பமாக வாழ்க்கை நடத்த ஏந்து இருக்க வேண்டும். 'இன்பம்' என்பதை ஒரு நாட்டின் 'அணி'யாக வள்ளுவர் வண்ணித்து இருக்கிறார்.

அப்படிப்பட்ட நிலைமையை ஏற்படச் செய்கிற அரசுதான், உண்மையான 'தமிழ் அரசாக' இருக்க முடியும்.

மேற்கண்டபடி, வள்ளுவர் வகுத்துக் கூறிய தமிழ் அரசு என்பதற்கு 'உரிமைத் தமிழ்நாடு' என்பது மற்றொரு பெயர்.

உலகப் பெரியார் என்ற பெயருக்கு, உரிய திருவள்ளுவர் காட்டிய வழியில் 'அரசு' அமைத்தால், எல்லா மக்களும் இன்புற்று வாழ முடியும்.

## 12. வருங்காலம்

தமிழ்நாட்டின் 600 ஆண்டுக் கறுப்புக் 'காலவட்டம்' முடிந்து விட்டபடியால், இனித் தமிழ்நாடு விடுதலை அடைவது உறுதி! விழித்து எழுந்த தமிழ் மக்கள் இதை உணர்ந்து விட்டார்கள். ஆகவே, மீண்டும் தமிழ்க்கொடி பறப்பதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது!

www.thamizham.net - Free E book No 7504

400 இலக்கம் தமிழ் மக்கள் ஓரினம்—தமிழ் இனம் என்பதை உணர்ந்து, நமது அடிமைத் தளையை அறுத்து எறிவது என்று வீறிட்டு எழுந்தால், அதை எதிர்த்து உலகமே திரண்டாலும் தடுக்க முடியாது. தில்லி அரசாலும் முடியாது. அந்த அரசிற்கு உடந்தையாக இருக்கிற 33 கோடி வடவர்களாலும் முடியாது.

30 இலக்கம் அயர்லாந்து மக்கள் விடுதலை கேட்ட போது, அவர்களைத் தடுப்பதற்கு அவர்களைப்போல் 15 மடங்கு அதிக எண்ணிக்கை உள்ள ஆங்கிலேயர்களால் முடியாமல் போய்விட்டது அன்றோ?

**உரிமை நாடு ஏற்பட்டால் . . .**

தமிழ், நாடு, தில்லியின் வல்லாண்மையில் இருந்து விடுபட்டு, உரிமை நாடாக ஏற்பட்டால், தமிழ்மொழி உண்மையிலேயே ஆட்சி மொழி ஆகும்! தமிழ்க் கலவி வளரும். அயலவரும் தமிழைப் படிப்பார்கள்!

தில்லியின் சுரண்டல் அடியோடு ஒழியும். இதுவரை தில்லியார் தமிழ்நாட்டிலிருந்து சுரண்டிச் சென்ற உரு. 800 கோடியையும், ஒரு காசு நிலுவை இல்லாமல் கணக்குப் பார்த்து, திரும்பப் பெறுவார்கள், தமிழ் மக்கள். அந்தப் பணத்தைக் கொண்டு, தமிழ் நாடு முழுவதும் மாவட்டம் தோறும்—வட்டம் தோறும் புதிய புதிய தொழிற்சாலைகள் கட்டப்படும்; தமிழ் மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும்; தமிழ்த் தொழிலாளர்கள், உலகத் தொழிலாளர்கள் எல்லோரையும்விட அதிக ஊதியம் பெறுவார்கள். தமிழ்நாட்டில் 'இல்லை' என்பது இல்லையாக ஒழியும்! கண்ணீர் விட்டு அழும் தமிழ்த் தாயின் முகம் மாறிப் புன்னகை தவழும்!

தமிழர்கள் தலைநிமிர்ந்து நடப்பார்கள். தமிழன் என்றால் உலகத்தில் மதிப்பு உயரும்.

**தமிழர் வல்லரசு**

தமிழ்நாடு வல்லரசாக மாறி, வானத்திலும் தரையிலும், தண்ணீரிலும் தமிழ் வீரர்களுக்கு நிகரில்லை என்று ஏற்படும். தமிழ்ப் படைக்கு உலகத்தார் தலை வணக்கம் செய்வார்கள்.

---

o 1958 பிப்ரவரி 18-ஆம் பக்கல், திலலிப் பாராளு மன்றத்தில் நேரு பேசும்போது, உரிமைத் தமிழ்நாடு கோரிக்கை பற்றிக் குறிப்பிட்டு **'Amazing, nonsensical, wholly irresponsible, Feudal, and absurd'** என்று கூறினார். இது, தமிழ் மக்கள்மீது அவர் கொண்டுள்ள வெறுப்பையே காட்டுகிறது. கறுப்பு நிறத்தவர்களைக் கண்டால் அவருக்கு அறவே பிடிக்காது; கறுப்பு நிறம் உள்ளவர்களை, இந்தியாவின் தூதுவர்களாக வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியாது என்று அவர் விடாப்பிடி செய்கிறார்.

www.thamizham.net - Free E book No 7504

தமிழர் கப்பல் உலகத்தைச் சுற்றும். வாணிபத்துறையில் தமிழர்கள் சாய்கால் ஓங்கும்.

உலக நாடுகளில் தமிழ்த் தூதுவர்கள் முதல் இடம் பெறு வார்கள். உலகெங்கும் தமிழ் முழக்கம் செய்யப்படும்.

உலக நாடுகளில் ஒன்றாகத் தமிழ்நாடு விளங்கும். உலக நாடுகள் (ஐ. நா.) அவையில் தமிழ்நாட்டுப் படிநிகராளருக்கு ஒரு நாற்காலி போடப்படும்.

தமிழ் மக்கள், தில்லியின் குறுக்கீடு இல்லாமல், தன்னியக்க மாக—நம்முடைய காரியத்தை நாமே கவனிக்கும் நிலை ஏற்பட் டால், 'கள்ளத்தோணி' வில்லங்கம் ஒரே நாளில் முடிவாகி விடும். 400 இலக்கம் தமிழ் மக்களும், 65 இலக்கம் சிங்களர்களும் பேசி, இந்தக் காரியத்தை நல்ல வகையில் முடிவு செய்ய வழி பிறக்கும்!

நாணயத்தில், அஞ்சல் தலையில், அரசு இலச்சினையில்—எல்லா வற்றிலும் தமிழ்மொழி இடம் பெறும். தமிழ்நாட்டின் 'நாட்டுப் பண்' தமிழ்மொழியில் முழங்கட்டும்!

துண்டுபட்டுக் கிடக்கும் தேவிகுளம்—பீர்மேடு, வடக்கே வேங் கடம் வரை உள்ள தமிழ்ப் பகுதி, பாண்டிச்சேரி, காரைக்கால், சிங்களர்களின் பிடிப்பில் சிக்கியுள்ள ஈழம்—எல்லாம் ஒன்றுபட்டு 'நாம்—தமிழர்' என்ற உணர்ச்சி தமிழ் மக்களிடையே வளர்ச்சி அடையும்!

**தமிழ்ப் படை**

திருக்குறள் சொல்லும் இலக்கணப்படி 'தமிழ்நாடு' இருக்கும். அதில் படை இருக்கும். வெளிநாட்டு 'நட்பு' இருக்கும்!

'பசியும் பிணியும் ஒழியும்! வளமும் வாழ்வும் பொழியும்!! துன்பம் மறையும்! இன்பம் நிறையும்! 'கருப்புக் காலவட்டம்' நீங்கும்! பொற்காலம் ஓங்கும்!! (முற்றும்)

---

தமிழர்கள் வாழுகின்ற மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் மட்டும் வந்தால் போதும் என்றும், அப்படிப் பெயருள்ள தமிழ்நாட்டிற்கு 'மாநிலத் தன் ஆட்சி' என்ற போலி உரிமை கிடைத்தால் போதும் என்றும் சில 'தேசியக் கொள்கையர்கள்' கூறுகிறார்கள். ஆனால், நாடு என்பதற்கு வள்ளுவர் வகுத்த இலக் கணத்தின்படி, அதற்குப் படையும், வெளிநாட்டு உறவும் இருக்க வேண்டும். இவை இரண்டும் இல்லாமல், பெயரளவில் 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்தால், அஃது இரண்டு கண்ணும் இல்லாதவனுக்கு 'நல்ல கண்ணு' என்று பெயர் வைப்பதுபோல் அன்றோ இருக்கும்!

www.thamizham.net - Free E book No 7504

# பெருநாவலரின் பொருளியல் நோக்குகள்

—சி. அரசிறைவன், தஞ்சை

**பொருள் :** பொருள் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் இருந்தாலும் சிறப்பாகக் கொள்ளப்படுகின்ற பொருள் செல்வப் பொருளாகும். 'இருவகைப் பொருள் கல்விப் பொருள் செல்வப் பொருள்' என்கிறது திவாகரம். உலகமே பொருள் உலகமாக (Material world) விளங்குவதால், பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை (247) என்றார் பொய்யாமொழியார். 'பணமில்லாதவன் பிணம்' என்பது பழமொழி. ஒண்பொருளை காழ்ப்ப இயற்றினால் (760) அறமும் இன்பமும் ஒரு சேரக் கூடும் என்றார். பொருளைப் போற்ற வேண்டுமென்ற குறிப்பினைப் பொருளாட்சி போற்றாதார்க் கில்லை (252) என்று வலியுறுத்தினார். ஔவையாரும் 'பொருள் தனைப் போற்றி வாழ்' என்றார்.

**பொருளின் பண்பற்ற இயற்கை :** பெறுகின்றவரின் பண்பை யறிந்து, பொருள் சேர்வதில்லை; பொருளீட்டும் திறத்தைப் பொறுத்தே சேரும்; இல்லையேல் விலகிவிடும். இப் பண்பற்ற போக்கை நினைந்து பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள (241) என வருந்திக் கூறினார். தீயவும் செல்வம் செயற்கு (375) நல்லவா கின்ற பொல்லா நிலையைக் காட்டினார். அவ்விய நெஞ்சத்தான் ஆக்கத்தையும் செவ்வியான் கேட்டையும் (169) அதற்குரிய காரணத்தையும் ஆராய்ந்து மாற்றியமைக்கத் தூண்டினார்.

**உழைப்பு :** பொருளை ஒவ்வொருவரும் உழைத்துப் பெற வேண்டும் என்ற கோட்பாடு உடையவர் வள்ளுவர், 'உழையாளை நோயாளி, ஊர் திருடி என்போம்' என்றார் பாவேந்தர். பொருள் தன்னுடைய உழைப்பால் மட்டுமே வந்ததாக இருக்கவேண்டும் என்ற குறிப்பினை முப்பாலில் மூவிடங்களில் வலியுறுத்துகிறார். தாளாற்றித் தந்த பொருள் (212) என்று அறத்துப்பாலிலும், 'தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள் தந்தது (1065) என்று பொருட்பாலிலும், தமது பாத்து (1107) என்று இன்பத்துப்பாலிலும் உழைப்பை வலியுறுத்திச் சுட்டிக் காண்டலைக் கண்டிக்கின்றார். வேளாண்மை செய்வதற்கு அடிப்படை தாளாண்மை (614) என் பார். எல்லாவற்றையும் துறந்த (343) துறவியைக் கூட உழைப் பைத் துறக்கக் கூறினாரில்லை. தவம் செய்வார் தங்கருமம் செய்வார் (266) என்றும் தவத்தைச் செய்தலும் (265) என்றும் கருமத்தின் தேவையை உணர்த்தினார்.

www.thamizham.net - Free E book No 7504

**உடைமை :** பொருள் உடைமைகளை விட பண்புகளையே உடைமைகளாகக் குறிப்பிடுகின்றார். அன்பு, அருள், ஒழுக்கம், பொறை, அறிவு, ஆள்வினை, ஊக்கம், நாண் ஆகியவற்றை உடைமை என்கிறார். மேலும் பொருள் உடைமை நில்லாது நீங்கி விடும் (592) என்று கூறி, உள்ளம் உடைமையை நிலையான உடைமையாகக் குறிப்பிடுவதையும் எண்ணிப் பாருங்கள்! அறிவுடையார் எல்லாம் உடையார் (430) என்பது தமிழ் மறை.

**நிலவுடைமை :** உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற சொல்லப்படுகின்ற இன்றைய முற்போக்குக் கருத்தினை வள்ளுவர் அன்றே கொண்டிருந்தார். நிலத்திற்கு உரிமை உடையவன் என்ற பொருளில் கிழவன் (1039) என்று உழவனுக்குப் பெயரிடுகின்றார். 'செல்லான் கிழவன்' என்பதால் ஒவ்வொருவரும் தாம் நேரிற் சென்று பார்க்குமளவிற்கே நிலம் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், அதற்கு மேல் வைத்திருப்பது மிகை என்றும், அம் மிகை நிலம் நிலமற்றவர்கட்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்புக் காட்டுகிறார். இலமென்று சோம்பி இருக்காமல் ஒவ்வொருவரும் உழைத்துப் பிழைக்க (1040) வற்புறுத்துகிறார்.

**முதலும் வாணிகமும் :** முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை (449) என்பது வள்ளுவம். இதற்கு உரையாசிரியர்கள், முதற் பொருள் இல்லாத **வணிகர்க்கு** அதனால் வரும் ஊதியம் இல்லையாம்' என்று பொருள் எழுதினர். எனவே, முதல் வணிகர்க்கே உரியதாக உள்ளது என்பது தெளிவாகிறது. இக் குறள் அரசியலில் இருப்பதால், வணிகர்கள் அரசிடமிருந்து முதலைப் பெற்றுத் தொழில் நடத்தினர் என்று தெரிகிறது.

பொருளீட்டத்தைக் குறுக்கு வழியிற் செய்து பெருஞ் செல்வராக ஆவதற்கு வாணிகம் பெரிதும் பயன்படுகிறது. பிறதுறையினர் விரைவில் பெருஞ் செல்வர்களாவது அரிது. எனவே நடுநிலையுணர்ச்சி வணிகர்க்கே மிகவும் வேண்டுவது. இதனையுணர்த்த நடுவு நிலைமை அதிகாரத்தில், இறுதிக் குறளை வாணிக நடுவு நிலைமைக்கு ஒதுக்கினார். பிறவும் தமபோல் பேணி வாணிகம் செய்யுமாறு தூண்டினார் (1020).

'நடுவு நின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய் மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது, கொடுப்பதூஉங் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும் —**பட்டினப்பாலை** (207-211)

கடியலூர் உருத்திரங் கண்ணனாரின் இப் பாடல் அக் குறளுக்கு விளக்கவுரையாக அமைந்திருப்பதையும் காணலாம். பிறவிடத்தும்

www.thamizham.net - Free E book No 7504

பொருள் அன்போடும் அருளோடும் வரவேண்டும் (755) என்று விதிக்கிறார்.

ஒண்பொருளைக் காழ்ப்ப இயற்றவேண்டும் (760) என்றும் செய்க பொருளை (759) என்றும் வருமிடங்களில், இவற்றை அரசு செய்ய வேண்டும் என்று பொருள் கொள்ள வேண்டும். தனியார்க்கு இவை உரியதாகக் கொள்வது பொருந்தாது. இவை நாடாளும் அரசுக்கு உரியது என்பது தோன்ற நாடு, அரண் ஆகிய அதிகாரத்திற்கு அடுத்ததாக 'பொருள் செயல் வகை' அதிகாரத்தை வைத்துள்ளார் என்பதனையும் கருதுக.

**திருட்டு :** திருட்டும் சுரண்டலும் ஏறத்தாழ ஒன்றே. இரண்டும் பிறரறியாமல் செய்யப்படுவது. சுரண்டலைச் சட்டத்திற்குட்பட்ட திருட்டு என்று கூடக் கூறலாம். கள்ளாமை, வெஃகாமை ஆகிய அதிகாரங்களில் இவற்றைக் கடுமையாகக் கண்டிக்கிறார். சுரண்டலற்ற குமுகாய அமைப்பைப் பண்பாட்டின் அடிப்படையில் அமைக்க விரும்பிய பெருந்தகை வள்ளுவராவார்

**தாழ்விலாச் செல்வர் :** நாடு அதிகாரத்தில் தாழ்வு இலாச் செல்வர் (731) என்று குறிப்பிட்டுள்ளதை வைத்துக்கொண்டு, வள்ளுவர் பணக்காரர்கள் நாட்டில் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார் என்றும், எனவே தனி உடைமைக் குமுகாய அமைப்பை அரண் செய்து வலுப்படுத்தும் கருத்துகளைக் கொண்டிருக்கிறார் என்றும் கூப்பாடு போடுகிறார்கள். அறிஞர்கள் இத்தொடருக்குரிய ஏற்புடை விளக்கங்களைத் தாராதது, இத்தகு புரட்டுக் குரல்களுக்கு இடம் தந்து நின்றது. தாழ்விலாச் செல்வரை 'வணிகர்' என்று பரிமேலழகர் குறிப்பாக உணர்த்துகிறார். தாழ்விலாச் செல்வரென்றால் ஏற்றத் தாழ்வில்லாத செல்வரென்பது பொருள். சீருடைச் செல்வர் (1010) என்று பிறிதோரிடத்தில் வள்ளுவரே குறிப்பார். **செல்வர்கள் என்பது இங்குப் பணக்காரர்களைக் குறிக்காது;** அவர்களைக் குறிக்க **'பெரும்'** என்ற அடைமொழியைத் தவறாது இடுவார். இங்குச் செல்வமென்றது வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படைப் பொருட் செல்வத்தையும், வள்ளுவரே 'செல்வம்' என்று குறித்த அருள், வேண்டாமை, கல்வி, கேள்வி, போன்ற பண்பு அறிவு நலன்களையுமே! தாழ்விலா, சீருடை என்ற அடைகள் அறவழிப்பட்ட மேன்மையைச் சுட்டின; செல்வத்திற்கும் செல்வரின் பண்பிற்கும் பொதுவாய் நின்றன. இயல்பான வாழ்க்கைக்கு வேண்டியவற்றைச் **செல்வம்** என்றும் மிகுதியானவற்றை **பெருஞ்செல்வம்** என்று வேறுபடுத்திக் கொள்க!

**பெருஞ்செல்வம் :** பெருஞ் செல்வமென்பது நீங்கக்கூடிய தன்மை கொண்டது என்ற குறிப்பினை கூத்தாட்டு அவைக் குழாத்தற்றே (332) என்ற சீரிய உவமையால் காட்டுகிறார். பெருஞ் செல்

www.thamizham.net - Free E book No 7504

வர்கள் எப்படி யெல்லாம் இழிந்தவர்களாக இருப்பார்கள் என்பதனைப் பல இடங்களில் விளக்குகிருர். பண்பிலான் பெற்ற பெருஞ் செல்வம் (999), பேதை பெருஞ்செல்வம் (565), செயற்பால செய்யாது இவறியான் செல்வம் (437) போன்ற செல்வங்களையுடைய செல்வர்கள் நிரம்பிய நாட்டையா வள்ளுவர் காண விழைந்தார்? இவர்களெல்லாம் ஒழிந்த நாட்டையல்லவோ அமைக்குமாறு வேண்டினுர்.

**நன்றியில் செல்வம்:** குறுக்கு வழியில் பொருளீட்டிய பல பெருஞ் செல்வர்களையும் உழைப்பைச் சுரண்டி உறுபொறுள் (1009) ஈட்டிய பண முதலைகளையும் இவ்வதிகாரத்தில் காண்கிறோம். நன்றியில் செல்வம் என்ற தொடருக்கு நன்மையில்லாத வழியில் ஈட்டப்பட்ட செல்வம் என்பது கருத்து. வைத்தான் வாய்சான்ற பெரும் பொருள் (1001) அடுக்கிய கோடி (1005), பெருஞ்செல்வம் (1006) அன்பொரீஇத் தற்செற்று அறநோக்காது ஈட்டிய ஒண்பொருள் (1009) ஆகிய நன்றியில் செல்வங்களை நமக்குக் காட்டியதன் நோக்கம் என்ன? இவற்றைப் பாத்தியுள் நீர் சொரிந்து (718) வளர்ப்பதற்காகவா? இனங்காட்டுவதன் நோக்கம், பொருளியல் மாற்றத்தை, இல்லை புரட்சியை உண்டாக்கவல்லாமல் வேறு எற்றுக்கு? எண்ணிப் பாருங்கள் என்று நாம் சொல்கிறோம்: நினைக்கப்படும் (169) என்று வள்ளுவர் சொல்கிருர்.

**பங்கீடு:** தாமே தமியர் உண்ணுதலை, இரத்தலைவிட இழிவாக (229) வள்ளுவர் கருதுகிருர் பகுத்துண்ணலை, பாத்தூண் (44, 227, 1107) என்று குறிப்பிடுகிருர். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் (322) என்ற தொடரால் பங்கீட்டு முறையை வலியுறுத்துகிருர். பங்கீட்டு முறை இல்லையேல் பசியை முழுமையாக ஒழித்து விட முடியாது. பசியை ஒழிக்கத் தவறுவது, கொல்லாமைக்கு நிகரானது என்றும் கருதினுர். கருதவே, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பலைக் 'கொல்லாமை' அதிகாரத்துள் வைத்தார். பகுத்துண்ணுமையும் கொலையின் பாற்பட்டதே என்று தெளிவாக்கினுர்.

**பசியும் இரப்பும்:** வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை (221) என்றும் அந்த ஒன்று உணவுதான் என்பதனையும் ஈகை அதிகாரத்தால் அறிகிறோம். பசி ஆற்றல் (225), அழிபசி தீர்த்தல் (226), பசி என்னும் தீப்பிணி (227) போக்குதல் என்பதை ஆற்றலுள் சிறந்ததாக வள்ளுவர் குறிப்பிடுகிருர். உறுபசியை ஒழிக்க தள்ளா விளையுளை (731) நாட்டிலே பெருக்க வேண்டுமென்கிருர். இப்படி பசிமாற்றலை வலியுறுத்தும் வள்ளுவரா இரந்துண்ண வேண்டுவார். கரவாது உவந்தளிக்கின்றவர்களிடத்திலும் இரவாதிருத்தல் கோடி பெறும் (1061) என்று சொல்லியவரல்லரா இவர்? வள்ளுவர் இரத்தல் (பிச்சை எடுப்பதை) வரவேற்கிருர் என்று கொச்சைப் படுத்திப் பேசும் புல்லறிவாளர்களை என்னென்று சொல்வது?

www.thamizham.net - Free E book No 7504

இரவச்சம் அதிகாரத்தில் இரவை மிக இழிவாகப் பேசுகிறார். இரவு பாடிய பின் இரவச்சத்தைப் பேசியதன் நோக்கம், இரவு நிலையாக இருப்பதற்காகவா? இன்றும் வருவது கொல்லோ (1048) என்று அஞ்சுகின்றானே, அந்த அச்சத்தைப் போக்குவதற்கு அவர் குரல் கொடுக்கவில்லையா? அப்படி வாழுமாறு அரசமைப்புச் சட்டத்தை இயற்றியவன் (1062) பரந்து கெட வேண்டுமென்றால் என்ன பொருள்? சட்டத்தை இயற்றியவனை. நாட்டை விட்டே துரத்த வேண்டுமென்று பொருளாகவில்லையா?

**சொத்துரிமை:** சொத்துரிமை பற்றிய வள்ளுவரின் கோட்பாடு இதுகாறும் எவர் பார்வையிலும் விழவே இல்லை! பொருட்பாலிலே இருக்கும் என்று துழவ முற்படுவர். பொருத்தமான இடத்தில் வரிசை யறிந்து கருத்தைப் புதைப்பதிலே வல்லவர் வள்ளுவனார்!

சொத்துரிமை என்றவுடன் நம்முன் தோன்றுவது நம் மக்களே என்று விளக்கவும் வேண்டுமோ? விளங்கவே, மக்கட்பேறு அதிகாரத்தையும் புரட்டுங்கள்!

தம்பொருள் என்ப தம்மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும். —(63)

முதலிரண்டு குறள்களில் மக்கள் அறிவுடையராகவும், பண்புடையராகவும் இருக்க வேண்டுமென்றார். பொருள் உடையவராக இருக்க வேண்டுமா? இவ் வினவிற்கு விடையாகத்தான் அடுத்த குறளை (63) அமைக்கிறார். 'உரிமையுடைய சொத்து அவர்களின் மக்களே; மக்கட்கு சொத்து, அம்மக்களின் உழைப்பால் (வினையால்) வர வேண்டும் என்பது இக் குறளின் பொருள். இங்கே வழிவழி வரும் சொத்துரிமையைத் தகர்க்கிறார். உழைத்துப் பொருளீட்டுவதைக் கடமையாக்குகிறார். சொத்துரிமை ஒழிப்பை இதைவிட அழகாக யார்தான் சொல்ல முடியும்?

**வள்ளுவ நாடு:** மக்களால் நாடுதல் பெறும் தன்மையால் நாடு எனப்பட்டது. சுரண்டலற்ற தன்னிறைவு பெற்ற நாட்டை 'நாடு' அதிகாரத்தில் காண்கிறோம். இதனை நாடென்ப நாடா வளத்தன (739) என்ற தொடரால் அறிகிறோம். நோயின்மை, செல்வம், வினைபொருள், இன்பம், காவல் இவை நாட்டில் பொருந்தியிருத்தலும், மக்கள் அறிவும் பண்பும் பொருந்தியவர்களாய், சான்றாண்மை மிக்கவர்களாய் இருத்தலும் நாட்டிற்குச் சிறப்பாகும் என்று கருத்தறிவிக்கிறார்.

**சிலரின் மனக்குறை:** 'பலராலும் ஏற்றிப் போற்றப்பட்டு வந்துள்ள குறள் இன்றுவரை தனி உடைமைக் குமுகாய அமைப்

www.thamizham.net - Free E book No 7504

புக்கு எதிரான ஒரு சிறிய எழுச்சியைக் கூட இங்கே ஏற்படுத்திய தில்லை' என்று குறைபட்டுக் கொள்ளும் முனைவர் சாலையார் போன்றார்க்கு ஒரு சொல்! எழுச்சியை ஏற்படுத்தாதது நூலின் குறையன்று; நூலைக் கற்றவர்களின் குறையே. குறளை இலக்கியமாகக் கற்று வந்ததும், ஒருபொழுதும் வாழ்வது அறியாத (337) மக்களை வாழ்வாங்கு வாழ்விக்க வந்த வாழ்க்கை நூல் என்பதனை மறந்ததும், வள்ளுவரின் நெஞ்சக்கோளை காண மறுத்ததுமே அதற்குக் காரணங்களாகும். **புரட்சிக் கருத்துகட்கு வறட்சி உடைய நூலன்று திருக்குறள்; வளர்ச்சிற்கேற்ப கருத்துகளை வாரி வழங்கும் சுரப்பு நூல் வள்ளுவம்!** வள்ளுவரின் புரட்சி உள்ளத்தைப் புரிந்து கொள்ளுங்கள்; முனைந்து செயலாற்றுங்கள்; மனக் குறை அகலும்; குமுகாயம் மாற்றம் பெறும்.

**அருளுள்ளமும் புரட்சியும் :** செந்தண்மை பூண்டொழுகும் அருளுள்ளம் கொண்டு அறநூலியற்றிய அந்தணாளர் நம் செந்நாப் போதார். நடப்பிலுள்ள முறைகேடான குமுகாய அமைப்பைச் சீர் செய்யவும், அதே நேரத்தில் மாற்றி அமைக்கவும் வழி கோலுகிறார். அறப்புரட்சி ஒன்றையே விரும்புவார். அறப்புரட்சியால் மாற்ற முடியாது என்ற நிலை தெளிவாகிவிட்டால் வன்முறையையும் வரவேற்கத் தயங்காதவர் துன்பமுற்றுப் பொறுக்க முடியாமல் மக்கள் கண்ணீர் விடுகிற நிலை புரட்சியைத் தோற்றுவிக்கின்ற படையாக (555) மாறும் என்கிறார். வன்முறைச் செயல்களை உலகியல் பற்றி விளக்கும் பொருட்பாலின் இறுதியில் குறிப்பிடுவதைப் பாருங்கள்! கொடிறு உடைக்கும் கூன் கையர் (1077), கரும்புபோல் கொல்லப் பயன்படும் (1078) கீழ்மக்கள் உள்ளவரை, இருக்கவே செய்வர்.

**தொகு பொருள் :** இதுகாறும் கூறியவற்றால், பொருள் இல்லார்க்கு இவ்வுலக வாழ்வில்லை என்றும், பொருள் பண்பற்ற இயற்கையுடையது என்றும், உழைத்தே ஒவ்வொருவரும் உண்ண வேண்டும் என்றும் பிற உடைமைகளைவிட பண்புகளையும் அறிவையுமே சிறந்த உடைமைகளாகக் கருதுகிறார் என்றும், உழுபவனுக்கே நிலம் உரிமை என்றும், வாணிகருக்கு நிடுநிலை உணர்ச்சி மிகவும் தேவை என்றும், திருட்டும் சுரண்டலும் ஏறத்தாழ ஒன்றே என்றும், தாழ்விலாச் செல்வரென்பது பணக்காரர்களைக் குறிக்காது என்றும், பொருட் பங்கீட்டை வலியுறுத்துகிறார் என்றும், பசி மாற்றலின் மூலம் இரவு ஒழிக்கப்பட வேண்டும் என்றும், வள்ளுவ நாடு முழு நிறைவு உடையது என்றும், பொதுமறையான திருக்குறள் புரட்சிக் கருத்துகள் நிரம்பிய சுரப்பு நூல் என்றும், அற வழிப் புரட்சியை விரும்பும் வள்ளுவர் தேவையான பொழுது மற வழிப் புரட்சியையும் வரவேற்கத் தயங்காதவர் என்றும் கண்டு தெளிந்தோம். (தொடர்ச்சி அடுத்த பக்கம்)

www.thamizham.net - Free E book No 7504

# தமிழுக்கு இப்படி ஒரு பணி - செய்யலாமா என்று சிந்தியுங்கள்

—பேரா. பர். சாலை இளந்திரையன்.

தமிழகத்தின் அரசியல் வரலாறும் குமுகாய வரலாறும் இன்னமும் முழுமையாக எழுதப்படவில்லை; ஏன், அவற்றுக்குத் தேவையான முதன்மை மூலங்களும் துணை மூலங்களுமான அடிப்படைச் செய்திகளே கூட இன்னமும் திரட்டி வைக்கப்படவில்லை. ஆங்கில ஆட்சிக் காலத்தில் இந்திய வரலாறு என்று ஒன்று நமக்குக் கற்பிக்கப்பட்டது. அதிலே தமிழக வரலாறு நேரிய இடத்தைப் பெறவில்லை. நாடு விடுதலை பெற்றபின், தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ள தமிழக வரலாறுகள், போதிய தொடர்ச்சியும் செம்மையும் உடையனவாக இல்லை. நமது வரலாற்றுக்குத் தேவையான செய்திகள் திரட்டித் தரப்படாதிருப்பதே இந்தக் குறைபாடுகளுக்கெல்லாம் காரணமாக இருக்கிறது.

நமது இலக்கியங்கள் வரலாற்றுச் சுவடிகள் அல்ல. ஆனாலும், அவற்றுள் பலவற்றிலே சீரிய வரலாற்றுச் செய்திகள் உள்ளன. கழகப் பாடல்களிலும், பிற்காலத்து நூல்களான உலா, பரணி, பிள்ளைத்தமிழ் போன்றவற்றிலும். அவ்வக்காலத்திய வரலாற்றுச் செய்திகள் பலவற்றைக் காண முடிகிறது. ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள கல்வெட்டுகளிலும், இப்போது படி எடுக்கப்பட்டு வரும் பல கல்வெட்டுகளிலும் அடங்கியுள்ள (அரசியல் குமுகாய) வரலாற்றுச் செய்திகள் ஏராளம். நமது இலக்கியங்களும் கல்வெட்டுகளும் வரலாறு எழுதும் நோக்கோடு எழுதப்படாததால், சரியான வரலாற்றுக்குத் தேவையான கால அடைவு அவற்றிலே இல்லை. ஆனாலும், இவற்றிலும் ஏனை எழுத்து ஆவணங்களிலும் இடம் பெறாமல் போன சில செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் நாம் தேடி எடுக்க முடியுமானால்,—(மேற்குறித்த) இந்தச் செய்திகள் அடைவுபட்டுத் தமிழகத்தின் அழகிய வரலாறாக உருவாவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையில் . . . நமது தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு சிற்றூரும் பேரூரும் ஒரு பெரிய வரலாற்றுக் களஞ்சியமாக உள்ளது. இந்த ஊர்களைப் பற்றிக் கிடைக்கக்கூடிய எழுத்துக் குறிப்புகள், செவிவழிச் செய்திகள், பட்டயங்கள் முதலியவற்றைத்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

அமைதி வழியில் வாழ்வியல் மாற்றம்!
இல்லையேல், புரட்சி வழியே தேற்றம்!!

இப்பொழுது சொல்லுங்கள்! வள்ளுவத்தை 'மூசியத்தில்' வைக்கலாமா? இல்லை, ஒவ்வோர் இல்லத்திலும் இடம் பெறச் செய்து மக்களை வாழ்வாங்கு வாழ்விக்கலாமா?

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல. —பொதுமறை (337)

www.thamizham.net - Free E book No 7504

திரட்டி வகைப்படுத்தி வெளியிட்டால், நமது வரலாற்றுப் பெரு மாளிகையில் இதுவரை அடைத்துக் கிடக்கும் பல நெடிய வாயில்கள் திறந்துகொள்ள வாய்ப்பு உள்ளது. இதிலே பஞ்சாப் என்னும் பாஞ்சால மாநிலம் நமக்கு வழி காட்டுகிறது; அந்த மாநிலத்தில் ஒவ்வொரு சிற்றூரைப் பற்றிய சிற்றூர்க் கைப்புத்தகம் (Village Manual) ஒன்றை வெளியிடத் திட்டமிட்டு, அந்த மாநில அரசு பணியாற்றி வருகிறது.

ஒரு சிற்றூரின் மக்கள் தொகை அந்த மக்கள் பேசும் மொழி அல்லது மொழிக்கு உட்பட்ட இடமொழி, அவர்களின் உணவுப் பழக்க வழக்கங்கள், அந்த ஊரைப் பற்றிச் செவி வழியாகவோ எழுத்து மூலமோ கிடைக்கும் வரலாறு, அங்கே பிறந்த பலதுறை அறிஞர்கள், வீரர்கள், கலைஞர்கள், அந்த ஊர் மக்களின் தொழில்கள், அவர்களின் வழிபாட்டு முறைகள், புதிய மதம், வழிபாடு முதலியன புகுந்திருந்தால் அவற்றின் வரலாறு . . . என்பன போன்ற 60-க்கு மேற்பட்ட தலைப்புகளில் விளக்கங்களைத் திரட்டி ஒரு புத்தகமாக வெளியிடுகிறார்கள். இவற்றிலிருந்து கிடைக்கும் சில செய்திகள், அந்தப் பகுதியின் அரசியல் குமுகாய வரலாற்றைச் செம்மையாக எழுத மிகவும் உதவியாக இருப்பதாகவும் சொல்லுகிறார்கள். பஞ்சாபி மிகப் பழமையான மொழி அன்று; அந்தப் பகுதியின் மக்களும் மிக நீண்ட வரலாறு உடையவர்களல்லர். அடிக்கடி நிகழ்ந்த போர்களில் அடியழிந்து சிதறிப் போய், அவ்வப்போது குடிகொண்ட மக்களே பஞ்சாபியர்கள். தமிழர்களாகிய நமது நிலை அதுவன்று; நாம் நெடிய வரலாறு உடையவர்கள். பழங்காலம், இடைக்காலம், இக் காலம் என மூன்றுகப் பிரிந்து நிற்கும் வெவ்வேறு பண்பாட்டுப் பிரிவுகளைக் கொண்ட பரந்த வரலாறு உடையது தமிழகம்.

பாஞ்சாலம், 60 தலைப்புகளில் ஓர் ஊரைப் பற்றிய செய்திகளைத் திரட்டினால், நலம். 100-க்கு மேற்பட்ட பகுப்புகளில் செய்திகள் திரட்டிட வாய்ப்பு இருக்கிறது; அவற்றினைக் கொண்டு, செப்பமான தமிழக வரலாறு ஒன்றை உருவாக்கவும் வாய்ப்பு இருக்கிறது. நமது இலக்கியம் மற்றும் கல்வெட்டுகளில் கிடைக்கும் செய்திகளையே செங்கற்களாக்கி, — 'சிற்றூர்க் களஞ்சியம்' வழங்கும் கருத்துகளைச் சுண்ணும்பும் பைஞ்சுதையுமாகக் கொண்டு, நமது அரும் பெரும் வரலாற்று மாளிகையை எழுப்பி நிறுத்திடப் பெரிய வாய்ப்பு உள்ளது. ஆங்கில அரசு, 1933-இல், அந்நாள் சென்னை மாநிலத்தில் இருந்த ஊர்கள் அனைத்துக்கும் ஒரு பட்டியல் உருவாக்கி, (சென்னை மாநிலச் சிற்றூர்ப் பெயர் அகரவரிசை என்னும் பெயரில்) உருவாக்கி வெளியிட்டது. அதனிலும் மேம்பட்ட பணிகளை அவ்வரசு செய்யவில்லை. செய்திட அந்த அரசுக்குத் தேவையும் இருக்கவில்லை. அந்தப் பட்டியலில் கண்ட ஊர்ப்பெயர்களை அடிப்படையாகக் கொண்டு அறிஞர்கள் சிலர் ('ஊரும் பேரும்'

www.thamizham.net - Free E book No 7504

என்பன போன்ற) சில ஏடுகளைத் தந்தார்கள். ஆயினும் அவை, முழுமையான விளக்கங்கள் அல்ல; முழுமையான பலநிலை விளக்கங்களைத் திரட்டுவது தனி அறிஞர்களால் இயலக்கூடியதும் அன்று. தெளிவான ஒரு திட்டத்தோடு தமிழக அரசு செயற்பட முனைந்தால், அரிய பெரிய பழைய செய்திகளை வெளிக் கொண்டு வந்து விடலாம். நமது சிற்றூர்களில் பழமையோடு உள்ள தொடர்பு முழுமையாக அழிந்த புதிய தலைமுறை ஒன்று உருவாகிடு முன் இந்தப் பணியை அரசு மேற்கொள்ள வேண்டும்.

இந்தப் பணியை நிறைவேற்றுவதற்குரிய திட்டம் பின்கண்டவாறு அமையலாம்: சிற்றூர்க் களஞ்சியத் திட்டம் அல்லது ஊர்க் களஞ்சியத் திட்டம் என்ற பெயரில் 4 அல்லது 5 ஆண்டுகளுக்குரிய ஒரு திட்டம் அமைய வேண்டும். சிற்றூர்க் களஞ்சிய நடுவர் என்றோ ஊர்க்களஞ்சிய இயக்கம் என்றோ அதற்குப் பெயர் அமைக்கலாம். இந்த இயக்கம் அல்லது நடுவம் ஒரு நெறியாளர், இரண்டு அல்லது மூன்று துணை நெறியாளர்கள், ஓர் ஆளுமை அலுவலர், மூன்று/நான்கு எழுத்தர்கள் ஆகிய ஊழியர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

இயக்கத்தின் பணி பெரும்பாலும் செய்திகளை அளாவித் திரட்டும் பணியாக இருப்பதால், நெறியாளரும் அவருடைய உதவியாளர் அல்லது ஒரு துணை நெறியாளரும், பெரும்பாலும் வெளி ஊர்களிலேயே பணிபுரியும் வகையாக அவர்களின் அலுவல்முறை அமையவேண்டும். அவர்கள் சென்று திரட்டித் தரும் செய்திகளை அலுவலகத்தில் உள்ளே பிற ஊழியர்கள் வகைப்படுத்திப் படி எடுத்து வைக்கவேண்டும். வேறு மூலங்களில் (Sources) கிடைக்கும் விளக்கங்களோடு இவற்றை அவர்கள் ஒப்பிட்டுப் பார்க்கவும் வேண்டும். வெவ்வேறு துறை அறிஞர்களின் உதவியோடு அவற்றைச் செப்பம் செய்யவும் வேண்டும். இவ்வாறு திரட்டித் தொகுக்கப்படும் செய்திகள், தலைப்பு வரிசைப்படி அடைவுபடுத்தப்பட்டுச் சிற்றூர்க்களஞ்சியப் பொத்தகமாக வெளியிடப்படல் வேண்டும்.

துருக்கி நாட்டிலே வீரன் கமால் பாட்சா ஆட்சிக்கு வந்த பிறகு, இதுபோன்ற ஒரு திட்டத்தால் துருக்கி மொழிக்கே புத்துயிர் ஊட்டப்பட்டது. துருக்கி நாட்டிலே அரபி, பெர்சியன் என்னும் அயல்மொழிகளுக்கே பெருமதிப்பு இருந்தது; ஆட்சியும் அவற்றிற்கே முதன்மை தந்தது. தாய்மொழியான துருக்கி, முழுமையாக ஒதுக்கப்பட்டு உயிர் குன்றிக் கிடந்தது. இத்தகையதொரு புரட்சித் திட்டத்தால், துருக்கி மொழி புதுப்பொலிவு பெற்று வாழ்ந்திடச் செய்தார் கமால். அரசு மனம் வைத்தால், கடுமையான நெடிய புறக்கணிப்புக்கு உள்ளான நமது அரசியல் மற்றும் குமுகாய வரலாற்றுச் செய்திகளையும் மீட்டெடுத்துப் பயன்படுத்த முடியும். ஆட்கள் இருக்கிறார்கள்; போதிய ஆர்வமும் இருக்கிறது. நமது தமிழக அரசுதான் இதிலே அக்கறை கொள்ள வேண்டும். o

www.thamizham.net - Free E book No 7504

# குமரி மலையைக் குறிப்பிடும் காரவேலனின் கல்வெட்டு

**—பேரா. இரா. மதிவாணன், க. மு**

பழந்தமிழர் தமிழ்க் கழகம் தோற்றித் தன்னேரிலா நாகரிகம் வளர்த்த குமரி நாடு கடல் கொண்ட பின்னும் எஞ்சிய பழம் பாண்டி நாட்டின் ஒரு பகுதியாக குமரிமலைத் தொடரின் வடகோடிக்கு வரும் குமரியாறும் கி. மு 175 வரையும் இருந்திருக்கிறது என்பதற்குச் சான்றாகக் காரவேலனின் கல்வெட்டு விளங்குகிறது. காரவேலன் கலிங்க நாட்டு மன்னன். அவன் இந்தியப் பெருநிலத்தின் பெரும் பகுதியில் வெற்றிக்கொடி நாட்டியவன். அவன் பொறித்த 'பிரா கிருத மொழிக் கல்வெட்டுகள்' இன்றைய ஒரிசா மாநிலத்தில் அத்திகும்பா குன்ற கற் குகைகளில் காணப்படுகின்றன. அத்தி கும்பா (ஆத்தி கும்பா) என்னும் சொல்லுக்கு யானைக் குகை என்று பொருள். இம் மன்னன் சமண சமயத்தைச் சார்ந்தவன்.

காரவேலனின் கல்வெட்டு கீழ்க்காணும் மூன்று அரிய செய்தி களைக் குறிப்பிடுகிறது.

1. வடபுலத்து ஆரியப் படையெடுப்பைத் தடுக்கத் தென் னாட்டுத் தமிழ் வேந்தர் ஒரு கூட்டணி ஏற்படுத்தியிருந்தனர். அதற்குத் தமிழசங்காதம் என்று பெயர். (இப் பெயர் பிராகிருத மொழி பெயர்ப்பு).

2. காரவேலன் தன் மதிநுட்பத்தால் இக் கூட்டணியைச் சிதைத்தான். அடுத்த ஆண்டில் பாண்டியனை வென்று பொன்னும் பொருளும் கொண்டு சென்றான்.

3. தன் பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் குமரி மலையில் ஒரு சமணப் பள்ளி, பதினாறு கல்மண்டபம் ஆகியவற்றை நிறுவி 75 இலக்கம் பணம் செய்து சமண சமயப் பேரவையை நடத்தினான்.

மோரியர்க்கு முன் வாழ்ந்த நந்தர்களின் கால முதலே வட புலத்து மன்னர் தென்னாட்டின் மீது படையெடுப்பது வழக்கமா யிருந்தது. மகா பதுமநந்தன் காலத்திலேயே கி. மு 414-இல் தென்னாட்டுத் தமிழ் வேந்தர் இக் கூட்டணியை அமைத்திருக்க வேண்டும் என்றும், இது காரவேலன் காலத்தில் கி. மு. 175-இல் முறிவடைந்தது என்றும் வரலாற்றாசிரியர் கருதுகின்றனர். 241 ஆண்டுக் காலம் சிதையாத தமிழர் கூட்டணியைக் காரவேலன் என்ன சூழ்ச்சி செய்து சிதைத்தான் என்பது விளக்கமாய்த் தெரிந்திலது.

காரவேலன் தன் பதினோராம் ஆட்சியாண்டிற் தமிழர் கூட் டணியைக் கலைத்தான். பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் பாண்டிய

www.thamizham.net - Free E book No 7504

னின் மதுரையைக் கைக்கொண்டு பொன்னும் பொருளும் முத்தும் மணியும் கவர்ந்து சென்றான். பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் குமரி மலையில் சமண சமயப் பேரவை நடத்தினான். அதில் 3500 பேர் கலந்து கொண்டனர்.

காரவேலனின் பாண்டிய நாட்டு வெற்றி ஒரு சில ஆண்டுகளே நீடித்தன வெனினும், குமரி மலையைச் சமணசமயப் பேரவை நடத்த ஏற்ற இடமாகத் தெரிந்தெடுத்தது வரலாற்றுச் சிறப்புடையதாக இருக்கிறது. இக் கல்வெட்டுக்குப் பொருள் கொண்ட பலரும் 'குமரி மலை' என்ற பெயரில் தென்னாட்டில் இப்பொழுது எந்த மலையும் இல்லாததனால் ஒரிசா மாநிலத்திலுள்ள அத்திகும்பா குன்றுகளில் ஒன்றையே குமரி மலை என்று தவறாகப் பொருள் கொண்டனர். 3500 பேர் தங்குமளவிற்குப் பெரிய மலைக்குவட்டுச் சமநிலம் அத்திகும்பா குன்றுகளில் இல்லை. குமரிமலை 'மங்கலம் பொருந்தியது' என்று கல்வெட்டு கூறுவதை நோக்க, அத்திகும்பா குன்றுகள் பழம் பெருமை கொண்டதாக ஒன்றுகூட இல்லை வடபுலத்துச் சமணர்கள் வெள்ளாடைப் பிரிவை (சுவேதம்பரர்) சார்ந்தோர். வடபுலத்தில் காரவேலன் காலத்தில் பௌத்த சமயமும் இந்து சமயமும் சமண சமயத்தோடு மோதத் தொடங்கியதால் சமணர்க்குத் தென்னாடு சமய வளர்ச்சித் தலைநிலமாயிற்று திசையாடைச் சமணர்க்குத் (திகம்பரர்) தென்னாடே என்றும் ஊற்றிடமாயிருந்ததால் புகழ் மிக்க குமரி மலையில் சமண சமயப் பேரவை நடத்த காரவேலன் எண்ணியிருக்க வேண்டும்.

வடபுலத்து வரலாற்றாசிரியர் பலரும் தென்னாட்டு வரலாற்றை அடியோடு புறக்கணிக்கின்றனர். கடல் கொண்ட குமரி நாட்டைப் பற்றி யறிந்திருந்தால் காரவேலன் கல்வெட்டுக்கு பொருள் கொண்ட வரலாற்றாசிரியர்கள் குமரி மலையை ஒரிசா நாட்டு அத்திகும்பா குன்றாகக் கூறியிரார். அத்திகும்பா குன்றுக்கு எக் காலத்திலும் குமரி மலை யென்று பெயரிருந்ததில்லை யென்று அறிந்தும் வேறு குமரி மலை இந்தியாவில் எங்கும் குறிப்பிடத் தெரியாததால் உய்த்துணர்வாக அத்திகும்பாவை குமரி மலை எனப் பிறழக் கூறினர். இது மட்டுமன்று வடபுலத்து வரலாற்றுப் பாட நூல்கள் தென்னாட்டுப் பழங்கால வரலாற்றை அறவே புறக்கணிக்கின்றன. பஞ்சாபு மாநிலப் பள்ளியிறுதி வரலாற்றுப் பாட நூல் ஒன்றில் மராட்டிய சிவாசி ஒருவனைத் தவிர தென்னாட்டு மன்னர் வரலாறு கூறப்படவில்லை.

தென்னாட்டு வேந்தர் வடபுலத்தில் பெற்ற வெற்றிகளைக் குறித்த கல்லெழுத்துகளும், கற்றூண்களும் வடபுலத்தும் கிடைத்திருக்கும். அவற்றைப் பற்றிய ஆய்வுகள் சரியாக மேற்கொள்ளப்படவில்லை இராசேந்திர சோழன் காழகத்தில் (பர்மா) பெற்ற

www.thamizham.net - Free E book No 7504

# தேள் கொட்டு

**—பா. இறையரசன், தஞ்சாவூர்**

தமிழ்நாட்டு மூலிகைகள் அனைத்து நோயும் தீர்க்கும் வல்லமை பெற்றவை. வீட்டுக்குப் பின்னாலிருக்கும் பச்சிலையை அறிந்து புரிந்து கொள்ளாததால், கையில் குறளிருக்கக் காடெல்லாம் அலைந்து நாடெல்லாம் குறுகித் தவமெல்லாம் புரிந்து, மேலெல்லாம் மெலிந்து, பிறமொழி பாலெல்லாம் வலிந்து நலிந்தாரைப் போல மேனாட்டு மருத்துவ முறையினரை நாடி ஓடி வாடிட வேண்டியிருக்கிறது. ஆங்கில மருத்துவ முறையினர் மருந்தில்லை என்று சொல்லி வருந்த விடும் நோய்களில் தேள் கொட்டும் ஒன்று. கோடைக் காலத்துப் பூமாரியென உதிரும் பூச்சிகளின் தாக்குதலுக்கு இம் மருந்துகள் உதவும். கையில் கிடைத்த மருந்தைக் கடிதெனப் பயன் படுத்த வாய்ப்பாகப் பல மருந்துகள் தரப் பெற்றுள்ளன.

1. தூய்மை செய்த வெடியுப்பை (நவசாரத்தை) ஒரு சிட்டிகை எடுத்துக் கொட்டு வாயில் வைத்து இரண்டு சொட்டு நீர் விடவும்.

2. மழை நீரில் உப்பைக் கரைத்து முழுமைக் கரைசலாக்கி வடிகட்டி, வடிகட்டிய நீரைக் கண்ணில் விடவும். உடலின் இடப் பக்கம் கடித்தால் வலக கண்ணிலும் வலப்பக்கம் கடித்தால் இடக் கண்ணிலும் விடவும்.

3. கடித்தவுடன் சீமை ஓட்டைக் கொட்டு வாயில் சிறிது நேரம் வைக்கவும்.

4. சிறு சிண்ணி இலையைக் கசக்கிக் கொட்டு வாயில் வைத்துக் கட்டவும்.

5. ஒரு பிடி தும்பை இலையை மென்று தின்னவும்.

6. முற்றிய தேங்காயிலிருந்து பிழிந்த பாலை ஒரு குவளை பருகித் துருவலைக் கடிவாயில் கட்டவும்.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

வெற்றிகளைக் குறித்த கற்றூண்கள் கிடைத்திருப்பதாகப் பர்மா நாட்டு வரலாற்று ஆய்வாளர்கள் செய்தி வெளியிட்டுள்ளனர். அவ்வாறு இராசேந்திரனின் வெற்றித் தூண்கள் வடபுலத்தும் கிடைத்திருக்க வேண்டுமன்றோ?

வால்மீகி, இடைக் கழகம் நடந்த கபாடபுரத்தையும் மயேந்திர மலையையும் தென்பாண்டி நாட்டிடங்களாகக் குறித்திருப்பதையறிந்தும், வடபுலத்து வரலாற்றாசிரியர்கள், மயேந்திரமலை ஒரிசாவில் இருப்பதாக கதைக்கின்றனர். சிவனிய ஆகமங்கள் தோன்றிய மயேந்திரமலையையும் குமரியாறு பெருகிவந்த குமரிமலையும் கடல் கொண்ட தென்பாண்டி நாட்டைச் சார்ந்தவை என்று இந்திய வரலாற்றாசிரியர்களுக்குத் தெளிவாக உணர்த்த வேண்டும். 0

www.thamizham.net - Free E book No 7504

7. நாயுருவி இலையைக் கசக்கி அதன் சாற்றைக் கொட்டு வாயில் தடவவும்.

8. நாயுருவி வேரைப் பச்சையாக மென்று சாற்றை மட்டும் உட்கொள்ளவும்.

9. சந்தனக் கல்லில் இசைத்தட்டின் (கிராமபோன்) துண்டை நீர் விட்டு இழைத்துக் கொட்டு வாயில் பற்றுப் போடவும்.

10. வெங்காயத்தைச் செம்பாதியாக வெட்டிக் கொட்டு வாயில் நன்றாகத் தேய்க்கவும். வெங்காயச் சாற்றைக் கண்களில் இரண்டு சொட்டு விடவும்.

11. பூவன் பழத்தைச் செம்பாதியாக வெட்டிக் கொட்டு வாயில் நன்கு தேய்க்கவும்.

12. நிலா விதையைச் சிறிது எடுத்துப் பொடி செய்து இரண்டு சிட்டிகைப் பொடியைக் குப்பைமேனிச் சாற்றில் கலந்து குடிக்கவும்.

13. பெருங்காயத்தைக் கல்லில் இழைத்து விழுதைக் கொட்டு வாயில் பூசி நெருப்பில் காய்ச்சவும்.

14. எட்டி மரத்தின் வேரை நீர் விட்டு அரைத்துக் கொட்டு வாயில் கனக்கப் பற்றுப் போட்டு நெருப்பில் காய்ச்சவும்.

15. எட்டிக் கொட்டையைச் சிறிது தேய்த்து அந்த விழுதில் இரண்டு குன்றிமணி அளவு எடுத்து பாலில் கலந்து குடிக்கவும்.

16. எட்டிப் பட்டைத்தூள் இரண்டு குன்றிமணி அளவு எடுத்து இரண்டு சோற்றுப்புச் சேர்த்து இரண்டையும் வெற்றிலையில் வைத்துத் தின்னவும்.

17. பொட்டிலுப்பைக் கொண்டு வந்து நீர்விட்டுக் குழைத்துக் கொட்டு வாயில் பூசி நெருப்பில் காய்ச்சவும்.

18. புளியங்கொட்டையைத் தரையில் தேய்த்துச் சூடாகக் கொட்டு வாயில் வைத்து ஒட்ட நஞ்சிறங்கியதும் கீழே விழும்.

19. புன்க இலையை உமிழ்நீர் விட்டு நன்கு அரைத்து வில்லை யாகத் தட்டிக் கொட்டு வாயில் ஒட்ட, நஞ்சு இறங்கியதும் கீழே விழும்

20. கொட்டிய தேள் கண்ணிலகப்பட்டால் பிடித்துக் கொடுக்கை வெட்டி (கொடுக்குக்கு முன் இருக்கும் மணியுடன்) எடுத்துக்கொண்டால் தேள் பிள்ளைப்பூச்சியாகி ஓடிப் போகும். கொடுக்கை வெட்டிப் புதைத்து விட்டுக் கொடுக்கை அடுத்த மணியில் உள்ள நீரைக் கொட்டு வாயில் வைத்தால் நஞ்சிறங்கும். ஆம். நஞ் சிருக்கும் இடத்திலே முறிவும் கிடைக்கிறது. பாம்பிருக்குமிடத்திலே கீரியும், கீரியிருக்கும் இடத்திலே பெரியா நங்கை சிறியா நங்கை யும் இருக்கின்றனவே! ஏறத்தாழ மூன்று தேள்களினுடைய (கொடுக்கை அடுத்த) மணிகளை நல்லெண்ணெய் (200 மிலி.) புட்டி

www.thamizham.net - Free E book No 7504

யில் போட்டு வைத்திருந்து தேள் கொட்டிய காலத்து கொட்டு வாயில் சில துளியிட நஞ்சு இறங்கும். தேள்களை அப்படியே போட்டு வைத்திருக்கலாம் என்பர்.

21. சுட்ட கத்தரிக்காயைக் கொட்டு வாயில் ஒத்தடம் கொடுக்க நஞ்சிறங்கும்.

22. புரு எச்சத்தைப் புளியங்கொட்டை யளவு கறுப்பு வெற்றிலையில் வைத்துண்ண செந்தேள் நஞ்சும் விலகும்.

23. சுண்ணும்பு, மஞ்சள், உப்புச் சேர்த்துத் தேய்க்க நஞ்சிறங்கும்.

24. சுண்ணும்பும் புளியும் கலந்து சூட்டோடு கொட்டு வாயில் பற்றிடவும்.

25. சுண்ணும்பும் வெடியுப்பும் (நவச்சாரமும்) கலந்து கொட்டு வாயில் தேய்க்க உடனே நஞ்சிறங்கும்.

26. சுண்ணும்பில் தும்பை, குப்பைமேனி இலைச்சாறு கலந்து பற்றிடவும்.

27. "பத்து மிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்" என்பது பழமொழி. மூன்று வெற்றிலையில், வெற்றிலைக்கு மூன்று மிளகென வைத்து மென்றிட நஞ்சிறங்கும்.

28. கொட்டு வாயில் ஒரு கையால் அரை ஆழாக்கு அளவு மண்ணெண்ணெயை ஊற்றி மறு கையால் தேய்க்கவும். இதுபோல் நான்கைந்து முறை செய்தால் நஞ்சு நீங்கும்.

எது நோயை உண்டாக்குகிறதோ அது நோயைப் போக்கும். ஒரு நோக்கு நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து. 'முள்ளை முள்ளால் எடுக்கலாம்' என்ற அடிப்படையில் அமைந்த 'ஒப்பண்டு' (Homocopathy) மருத்துவ முறையில் நான் கொடுத்துப் பயன் கண்ட மருந்துகள் சில :

1. **Ladam Pal :** கொட்டியவுடனே 5 சொட்டு மருந்தைச் சிறிதளவு நீரில் கொடுத்தால் கண்ணிமைக்கும் போழ்தில் நஞ்சு நீங்கும்.

2. **Echinacea O :** நச்சுப்பூச்சி எதுவெனத் தெரியவில்லை என்றுல் இம் மருந்தில் 5 சொட்டு சிறிது தண்ணீரில் கலந்து கொடுக்கலாம். சிலந்தி, பூரான் முதலான நச்சுக் கடிகளையும் கேட்கும்

3. **Calotropis 30 :** பித்த உடம்பினர்க்குத் தேள் கொட்டின் அவர்கள் கொடும் துன்பத்திற்குள்ளாகித் துடிப்பர். சாகவும் நேரும். அவர்க்கு இம் மருந்து அமிழ்தம் 5 சொட்டு சிறிது நீரில் 5 மணித் துளிக்கொரு முறை நஞ்சிறங்கும் வரை கொடுக்கவும்.

4. **Apis mel 30 :** வீக்கம் மிகுதியாக இருந்தால் கொடுக்கலாம.

o

www.thamizham.net - Free E book No 7504

# மொழியால் இணைகிறார்கள் - நூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பின்!

**—ப. பத்மநாபன், க. மு., ச. இ.**

நெதர்லாண்ட்சு, பெல்சியம் என்னும் இரண்டு நாடுகளிலும், முறையே நூற்று நாற்பது இலக்கம், அறுபது இலக்கம் டச்சு (Dutch) மொழி பேசும் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு இரு நாடுகளும் பிரிந்தபோது டச்சு மொழி பேசும் மக்களும் பிரிந்தனர். இப்போது, 1980-ஆம் ஆண்டில், இந்த இரண்டு நாடுகளிலும் உள்ள 200 இலக்கம் டச்சு மக்களும், தாங்கள் இரு நாடுகளில் பரவி வாழ்ந்தாலும், தங்களது டச்சு மொழியையும், அம்மொழியை அடிப்படையாகக் கொண்டு தங்களுக்கிடையிலான குமுகாய, பண்பாட்டு உறவுகளையும் வலுப் படுத்தவும், பாதுகாக்கவும், அவ்வகையில் ஒருங்கிணைந்து அந்த நோக்கங்களில் உதவி புரிந்திடவும், **'டச்சு மொழி ஒற்றுமை'** (Dutch Language Union) என்னும் அமைப்பை உருவாக்கி, உடன்படிக்கையையும் (Treaty) கையெழுத்திட உள்ளார்கள். டச்சு மொழியின் எழுத்துகளைத் தீர்மானிப்பது உட்பட, பல பண்பாட்டுச் செயல்களைப் பற்றிய ஒரு பண்பாட்டு ஒப்பந்தம் (Cultural Agreement) 1946-ஆம் ஆண்டிலேயே நெதர்லாண்ட்சுக்கும் பெல்சியத் துக்கும் இடையிலே ஏற்பட்டுள்ளது. ஆனால் 1980-ஆம் ஆண்டில் ஏற்பட்டுள்ள புதிய உடன்படிக்கை பழைய ஒப்பந்தத்தை விடப் பரவலானது. இதன்படி, டச்சு மொழி எழுத்துகள், அகரமுதலி, இலக்கணம், பிற நாட்டவர்க்கு டச்சு மொழிப் பயிற்சியில் தகுதிச் சான்று வழங்கப் பெறவேண்டிய ஏற்பாட்டுத் தகுதிகள் ஆகிய செயல்களில் எந்த ஒரு நாட்டில் வாழும் டச்சு மொழியினரும், தாங் களாகவே ஒரு முடிவுக்கு வராமல், ஒருவரை யொருவர் கலந் ராய்ந்தே முடிவுக்கு வர வேண்டும்.

இந்த 'டச்சு மொழி இணைப்பின்' முகாமையான அமைப்பு **'டச்சு மொழி மற்றும் இலக்கிய கருத்தாய்வுக் குழு'** (Consulting Committee for Dutch Language and Literature) என்பதாகும். டச்சு மொழியில் ஆராய்ச்சி, இலக்கிய ஆராய்ச்சி, மொழிப் பாது காப்பு, டச்சு இலக்கியங்களை மொழி பெயர்த்தல், அரசாளுமைச் செயல்களில் பயன்படுத்த வேண்டிய டச்சு சொற்கள், அவை சரி யாகப் பயன்படுத்தபடுவதைக் கவனித்தல் போன்ற பலவற்றையும் இந்த 'ஒற்றுமை' அமைப்பு கவனிக்கும். (The Hindu-20-9-1980).

தமிழ்நாடு, தமிழ் ஈழம், சிங்கப்பூர், பர்மா, மலேசியா, பிசித் தீவுகள், மொரிசீயசு, தென் ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றிலும் பரந்து சிதறி வாழ்கிறது மிழினம். தமிழ்நாட்டில், தமிழ்ப் பண்பாடு தனித்தனிச் சாதிப்

www.thamizham.net - Free E book No 7504

பண்பாடுகளாகப் பிரிக்கப்பட்டுச் சிதைக்கப் பெற்றுள்ளது. அதை விட, தமிழ்ப் பண்பாடு 'இந்தியப் பண்பாடு' என்னும் பெரும் போலித்தனமானதும் அயலானதும் உண்மையில் ஒரு பொய்த் தனமானதுமான ஒரு கருத்தால் கூறப்பெற்று முற்றிலும் மறைத் தழிக்கப்படும் நிலையில் உள்ளது. தமிழ் மொழியோ, இந்தி வல்லாண்மை (Hindi Imperialism) முன் இரண்டாந்தர நிலைக்குத் தாழ்த்தப்பட்டு அழிவை நோக்கிச்சிதைத்து இழுத்துச் செல்லப்பட்டுக் கொண்டுள்ளது. தமிழ் மொழியில் கற்பதும், ஏன்? தமிழைக் கற்பதே கூட வேண்டாத வேலை என்று தமிழ்நாட்டில் கருதப்பெறு கின்றது. அரசு ஆளுமையில் அறமன்றங்கள், கோவில்களில், பிற சமய வினைகளில் தமிழ் இல்லை. தமிழ் ஏன் இல்லை என்ற கேள்வி இல்லை. அதற்குப் புகரமாகத் 'தமிழைப் பயன்படுத்துவது விரும்பத் தக்கதா?' என்ற அருவருப்பான, இயற்கைக்கு எதிரான கேள்விகள் துணிவாகத் தமிழ்நாட்டுச் செய்தித் தாள்களில் (Is it Desirable to use Tamil in courts'? (The Hindu dated 5-9-1980) கேட்கப் பட்டு அதற்கு ஆதரவான கருத்துகளும் வெளியிடப் பெறுகின்றது. தமிழ் இனம் என்பதையே மறைத்து 'இந்தியர்கள்' என்று குறிப் பிடப் பெறுகின்றது.

அண்டை நாடான ஈழத்திலும் இதே போன்ற துயரம் நிரம்பிய சூழ்நிலைகளே உள்ளன. நம்மை விட இன்னும் கீழானது ஈழத்தில் தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்ட தொடர்ந்து நடைபெறும் சிங்களக் குடியேற்றம் தமிழின மக்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளனர். இனக் கல வரம், மொழி அழிவு, போன்ற துன்பங்களுக்குக் கடந்த முப்ப தாண்டுகளாக உள்ளான பின். தாங்கள் இழந்த இறைமையையும், உரிமையினையும் திரும்பி அடைய ஈழத் தமிழ் மக்கள் கடந்த மூன்றாண்டுகளாகப் போராடி வருகிறார்கள். இந்நிலைகளை யெல்லாம் தமிழ்நாட்டுத் தமிழ் மக்கள் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. இங்கு மிகப் பெரும்பான்மையானவர்களுக்குத் தெரிவிக்கப்படவே யில்லை. தமிழ்நாட்டுத் தாளிகைகள், நாளேடுகள் ஒன்றுகூட ஈழத் தமிழரின் உரிமை நாட்டுப் போராட்டத்தைப் பற்றி நினைப்பதில்லை. அல்லது; அதை எதிர்த்துக் கூப்பாடு போடுவது. இதுவா இன உணர்வு? ஏன் இந்த நிலை?

சிங்கப்பூரில் **'தமிழ் மொழி மற்றும் பண்பாட்டு அமைப்பு'** ('Tamil Language and Cultural Society) உருவாகியுள்ளது. ஆனால் இங்குத் தமிழ்நாட்டுத் தாளிகைகள் குறிப்பிடும்போது 'தமிழ் மொழியையும் இந்தியப் பண்பாட்டையும்' வளர்க்க இந்த அமைப்பு சிங்கப்பூரில் தோன்றியுள்ளது என்றுதான் குறிப்பிடு கின்றன. (Indian Express-5-8-80). ஏன் இப்படித் திசை மாற்றும் வேலைகள் நடைபெறுகின்றன? சமய வழியிலும் சரி, குமுகாயப் பழக்க வழக்க வழிகளிலும் சரி, மொழி வழியிலும் சரி, இன வழி

www.thamizham.net - Free E book No 7504

யிலும் சரி, 'இந்திய கலாச்சாரம்' என்றால் என்ன? அப்படி ஏதாவது இருந்தாலும், அஃது எப்படித் தமிழினத்துக்குப் பொருந்தும்?

முகாமையான காரணங்களில் ஒன்று தமிழன், அஃதாவது தமிழ்நாட்டுத் தமிழன், விழிப்புணர்வு இன்றி 'இந்தியர்' என்ற ஓர் அயன்மை அடையாளத்தில் (alien identity). 'இந்தியயியம்' (Indianism) என்ற மாய உணர்வில் (illusory) அமிழ்ந்து கிடப்பது தான்; தமிழன் என்ற இயற்கையான தன் அடையாளத்தை (Natural and original identity) இழந்ததுதான்; அதை வலியுறுத்த மறந்ததுதான். தமிழ் இன, மொழி நாட்டு நலன்களைப் பேண உறுதி எடுத்தோரும் தங்கள் கடமையை, நோக்கங்களை மறந்தது இப்போதைய புதிய சிக்கல். இந்தி, ஆட்சி மொழி எதிர்ப்பில் தொடங்கி இந்தி வல்லாண்மை எதிர்ப்பாகிப் பின் இந்தித் திணிப்பை எதிர்ப்பதாக மாறியிருந்தது. ஆனால் இந்தித் திணிப்பை எதிர்ப்பதை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டுள்ள அ. தி. மு. க, தி. மு. க. கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களே இப்போது இந்தியை இந்தியாவின் வெளிநாட்டுத் தூதுவரகங்களில் திணிக்கப்படுவதை மேற்பார்வையிடச் சென்ற பாராளுமன்றக் குழு ஒன்றில் பங்கேற்றுச் சென்றுள்ளனர் (Indian Express-10-9-80).

சிந்தனையற்ற, பொறுப்பற்ற செயலாகும் இது. தமிழர்கள் 'இந்தியர்களாகப்' பல நாடுகளிலும் வாழ்கிறார்கள். இந்தியத் தூதுவரகங்களில் இந்திதான் அலுவலக மொழி என்றால், இனி வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் எப்படி இந்தியத் தூதுவரகங்கள் தங்களது சிக்கல்களுக்கு உதவியும் கருத்துறைகளும் பெற முடியும்? இந்தி தெரியாத குற்றமா அல்லது இந்தியனாக இருப்பதின் குற்றமா? தவிர, வெளிநாட்டில் வாழ்ந்து, தங்கள் மொழியும் நாகரிகமும் சிதைந்ததை உணர்ந்து, இப்போதுதான் தமிழைக் கற்க வேண்டியதின் தேவையை அறிந்து, அதற்கான ஆர்வம் காட்டி, ஏற்பாடுகளை வெளிநாட்டுத் தமிழர்கள் செய்யும் வேளையில், இந்தியத் தூதுரகங்களிலும் கூட இந்தி என்ற நிலை ஏற்பட்டால், 'தமிழுக்குப் பகரமாக இந்தியைக் கற்றுக்கொள்ளுங்கள்' என்று இந்திய நடுவணரசு மறைமுகமாக வலியுறுத்தும் சூழ்நிலையும் உருவாகிறது. மன வருத்தத்துடன் கூற வேண்டியுள்ளது — தி. மு. க, அ. தி. மு. க. கட்சிகளும் இதற்குத் துணை போயிருக்கின்றன என்பதை. வேலியே பயிரை மேய்வது வெளிப்படை. தமிழ் மொழியை, தமிழர் நாகரிக, இலக்கிய நலன்களைப் பாதுகாக்கும் இயக்கங்கள் பிளவுபட்டுத் தொல்லைகளுக்குள்ளாகி வலிவிழந்ததால்தான், இன்று தமிழுணர்வு மங்கித் தமிழின நாகரிக நலன்களுக்கு அழிவு ஏற்படும் ஏதம் உள்ளது. தமிழ்நாட்டு அரசு அலுவலகங்களில், அறமன்றங்களில் தமிழைப் பயன்படுத்த அஃதாவது இந்த மண்ணுடன்

www.thamizham.net - Free E book No 7504

ஒன்றி ஆயிரமாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த மொழியை நடைமுறைப் படுத்த இழிவு, ஊக்கத் தொகை (Incentives) கொடுத்துக் கெஞ்ச வேண்டியுள்ளது (Indian Express-28-9-80). தமிழின நாகரிக, இசை, மொழி ஆராய்ச்சி வளர்ச்சிக்காகத் தொடங்கப் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், தமிழரின் கல்வி நலன்களுக்காக ஏற்படுத்தப்பட்ட பச்சையப்பன் அறக் கட்டளைக் கல்விக்கூடங் களும் சிதைந்து அழிந்து கொண்டுள்ளன. அரசர் அண்ணாமலை யாரும் கொடை வள்ளல் பச்சையப்பரும் இன்று உயிரோடு இருந் தால் அரத்தத்தை நெஞ்சிலிருந்து கொட்டியிருப்பார்கள்.

இந்தச் சூழ்நிலைகளில்தாம், நமக்கு உணர்வூட்டி, விழிப் படையச் செய்து, வழிகாட்ட 'டச்சு மொழி ஒற்றுமை' அமைப்பு போன்ற செய்திகள் வருகின்றன. இந்த அமைப்பின் உறுதிப் பாடான கொள்கைகளும், செயல் திட்டங்களும் தமிழின, மொழி, நாகரிக, நாட்டு நலன்களில் அக்கறை உள்ள ஒவ்வொருவராலும் ஆர்வத்துடனும் தேவையுடனும் படித்தறிய வேண்டுவனவாகும். தமிழ் மொழியையும், நாகரிகத்தையும் பேணிப் பாதுகாத்து வளர்த்துவர பன்னாட்டுத் தமிழின, மொழி நாகரிக அறிஞர்களை உள்ளடக்கிய ஓர் அமைப்பு தோன்றுவது தேவை. இப்போது உள்ள உலகத் தமிழ் பண்பாட்டியக்கம் (World Tamil Cultural Movement), உலகத் தமிழ் ஆராய்ச்சி கழகம் (Internation Institute of Tamil Studies) ஆகியவை அமைப்பிலும், செயல்திறனிலும் அவ்வளவு சிறப்புடையவாகத் தெரியவில்லை. உலகத் தமிழ் மாநாடு களும் இன, மொழி, நாட்டு நலன்களில் திட்டவட்டமான கொள்கை களையும், செயல் திட்டங்களையும் கொண்டுள்ளவாகத் தெரியவில்லை

தமிழினத்தின் நலன்களிலும், அவ்வின மொழி, நாகரிக, இலக்கியப் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி நலன்களிலும், தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு, தமிழறிஞர்களுக்கு, இசை வல்லுநர்களுக்கு, பொருள் வலிமையுடையோருக்கு, எல்லாரையும் விட, தமிழ்நாட்டு அரசியல் காரர்களுக்கு மிகுந்த தனிப் பொறுப்பு உண்டு. காரணம் தமிழன் எங்கு இருந்தாலும், அவனது தொன்மையான புனித நிலம் தமிழ் நாடுதான். இங்குத் தமிழனின் மொழியும் நாகரிகமும் சிறக்கா விடில், அது நமது மொழியின், நாகரிகத்தின் அழிவுக்கு வழியாகும். ஆக, தமிழ்நாட்டு அரசு அலுவலகங்களில், கல்விக் கூடங்களில், சமயக் கோவில்களில் தமிழ் சிறப்பிடமும் தனியிடமும் பெற வேண்டும். அப்படி ஒரு சிறப்பிடத்தை—தனியிடத்தை நமது மொழிக்கு நமது மண்ணில் கொடுப்பதற்கே நாம் 'இந்தியர்களாய்' இருப்பதும். நமது மண் 'இந்தியா'வின் ஒரு பகுதியாக இருப்பதும் தடைகளாய் இருந்தால், அவற்றை நீக்கவும் நாம் தயங்கக்கூடாது. 'இந்திய தேசியம்' என்ற பிடிப்பில் தமிழினமும், மொழியும்

www.thamizham.net - Free E book No 7504

நாகரிகமும் அடங்கியிருக்க வேண்டியுள்ளன. இந்தப் பிடிப்பு 'இந்திய ஒற்றுமை', 'இந்தியப் பண்பாடு' ஆகிய இடுக்கிகளை உடையது. இவற்றுக்கிடையே சிக்கித் தவிக்கும் நம் தமிழின மொழியும், நாகரிகமும் மூச்சுத் திணறி முட்டி இறக்காமல் கவனமாக இருக்க வேண்டும். 'இந்தியா' என்பதும், 'இந்தியன்' என்பதும் கடந்த சில நூற்றாண்டுகளில் வரலாற்றுப் போக்கில் ஏற்பட்ட விளைவுகள் தாம்; நமது தமிழினமும், மொழியும், நாகரிகமும் ஆயிரக்கணக்கான நெடுங்கால வரலாற்றையுடையது என்பது தெளிவாகும். அதை உயிர்ப்பிக்கவும், தொடரச் செய்யவும் நாம் விழிப்படைந்து, உணர்ந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். o

# வைதீக மதமும், வடமொழி பரவிய காலம்!

நம் தமிழகத்தில் தேவார காலத்திற்குச் சிறிது முன்னரே கோயில்கள் சிறிய அளவில் ஏற்பட்டன. களிமண் சுவர், ஓலைக் கூரை, இவைதாம் கோயில்கள். தேவார காலத்தில் சிவலிங்கங்கள் மரத்தடிகளில் இருந்தன. அவற்றையே நாயன்மார் வழிப்பட்டனர். அம் மரங்களே இன்று 'தலவிருட்சம்' எனப்படுகின்றன. பல்லவ அரசர்களே சைவ — வைணவக் கோயில்களைக் கற்களால் அமைத்தார்கள். மலைப் புழைகளைக் குடைந்து கோயில்கள் அமைத்தார்கள். பின்னரே இராசராச சோழன் முதலியோர் சோழநாட்டிலும் பாண்டிய நாட்டிலும் கற்கோயில்கள் கட்டினார்கள். அப்பொழுது (கி. பி. 700 முதல் 1200 வரை) சமண பௌத்த மதங்கள் உரம் ஒழிந்து, வைதிக மதம் பரவிய காலமாகும். அக்காலமே வடமொழியும் தமிழகத்தில் வல்லாண்மை செலுத்திய காலமாகும்.

— **இந்தியால் தமிழ் கெடும்** — நூல் : (பக். 20-21)

## 'தென்மொழி' சென்னை-5

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம்: | 15 உருபா | 35 உருபா | 35 உருபா |
| அரையாண்டுக் கட்டணம்: | 8 ,, | 18 ,, | 18 ,, |
| தனியிதழ்: | 1.25 ,, | 3 ,, | 3 ,, |

ஓரிதழுக்கு உருபா 2.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

www.thamizham.net - Free E book No 7504

# இணைத்தமிழ் பேசுபவர்களின் தாழ்ச்சி!
# தூயதமிழ் பேசுபவர்களின் உயர்ச்சி!

என்றுமே ஆங்கிலம் பேசுபவர்களிடையே ஒருவகை அறிவுத் தரம், நடைமுறைச் செப்பம், ஓர் அமைவான மனப் பக்குவம் முதலிய உயர்ந்த தன்மைகள் சில இருப்பதை எல்லாரும் கவனித் திருக்கலாம். தமிழைக் கலப்பாகப் பேசுபவர்களிடை இந்தத் தரவுயர்வு அவ்வளவு காணப்படுவதில்லை. இது, கல்வியினால் ஏற் படும் வேறுபாடான நிலைமட்டும் அன்று. ஆங்கிலம் எப்பொழுதும் செப்பமாக, இலக்கணப் பிழையில்லாமல் பேசப் பெறுவதால்தான். அதைப் பேசுபவர்களிடையும் ஓர் உயர்வு காணப் பெறுகிறது. தவறான ஆங்கிலம் பேசுபவர்களிடையே இவ்வுயர்வைப் பார்க்க முடியாது. பொதுவாகவே, ஆங்கிலம் படித்தவர்களை — பேசுபவர் களை விட, **கலப்புத் தமிழ்** பேசுபவர்களை — படித்தவர்களை மக்கள் குறைவாகவே மதிப்பிடுகின்றனர். இதற்கு அடிப்படைக் கரணியம் தமிழ்ப் படித்தவர்கள், பேசுபவர்கள் அதைத் தூய்மையாகக் கையாளாமைதான். **மொழியைத் தூய்மையாகவும் பிழையின்றி யும் பேசும் பொழுது தம்மையறியாமலேயே ஒரு தகுதிக்கு நாம் உயர்த்தப் பெறுகின்றோம்.** கொச்சைத் தமிழ் பேசுபவர்கள் தாழ் வாக மதிக்கப் பெறுவதும் இதனால்தான்.

இனி, தமிழ்ச் செய்தித் தாள்கள் படிப்பவர்களை விட ஆங்கிலச் செய்தித் தாள்கள் படிப்பவர்களைப் பாருங்கள். அவர்களிடம் ஒரு வகை அறிவடக்கம், மனத்தெளிவு, ஒரு தோற்றப் பெருமிதம் முதலி யன இயற்கையாகவே ஏற்பட்டிருக்கும். பொருளியல் ஏற்றத் தாழ்வையும் மீறி ஏற்படும் ஒருவகை அறிவு வளர்ச்சியும் மன வளர்ச்சியுமே இது. இந்நிலை அவர்களின் வாழ்க்கைத் தரத்தால் மட்டும் ஏற்படுவதன்று. மொழிநிலை தாழும் போது அதைப் பேசுப வனின் அறிவு நிலையும் மன நிலையும் இயக்க நிலையும் தாழ்வு படு கின்றன. மொழிநிலை உயரும்பொழுது அவை தாமே உயர்கின்றன. இஃதொரு மனவியல் உண்மையாகும்.

'தமிழைக் கலப்பின்றித் தூய்மையாகப் பேச வேண்டும், எழுத வேண்டும்' என்ற கொள்கையும் நடைமுறையும் உள்ளவர்களிடம், மற்றவர்களை விட, ஆங்கிலம் படித்த—பேசுகிறவர்களிடம் உள்ள தைப் போல் — ஒரு மிடுக்கு காணப்பெறுவதைப் பார்க்கலாம். ஆம், மொழி தூய்மையாக, இலக்கண முறைப்படி கையாளப்பெறும் பொழுது, அது கையாள்பவர்களையும் ஒரு தரத்துக்கு உயர்த்து கிறது. தனித்தமிழ் பேசுபவர்களிடம் ஆங்கிலம் பேசுபவர்களும் கூட அடக்க ஒடுக்கமாய் இருப்பதைக் காணலாம். இந்த மன வியல் உண்மையைக் கலப்புத் தமிழ் பேசுபவர்கள் கவனிக்க வேண்டும்.

நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார் வாய்ச் சொல். (959)

www.thamizham.net - Free E book No 7504

பொறுப்பினை ஏற்றபின், புதுகை மாவட்டத்தில் முத்தையர்கள் (முத்துராசா) சாதிக்காரர்களின் 'சங்க'த்திற்குத் தலைமை தாங்கினார்.

மன்னர் எவ்வழியோ குடிமக்கள் அவ்வழி என்பதுபோல் முதல்வரே சாதி மகாநாட்டிற்குத் தலைமை தாங்கும்போது, அவரது அமைச்சரவையில் சாதிக்கு ஓர் அமைச்சர் பதவி கொடுக்கும்போது தினமணிக் கதிரின் சாதித் தூண்டுதலை எப்படித் தடுப்பார் என்பதை மிக மன வருத்தத்துடன் தெரிவிக்கின்றேன். டாக்டர் அம்பேத்துகர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அரிசனங்களுடன் தாம் உணவு அருந்துவதுபோல் ஊரார் தெரிந்து கொள்ள படம் பிடித்துக் காட்டியுள்ளார். பள்ளியில் சேர்க்கும்போது கட்டாயமாக சாதிகள் குறிப்பிட வேண்டும் என்று சட்டமும் அவர் கைவயம் உள்ளது. இவற்றை முதல்வரே செய்யும்போது, தினமணிக் கதிரின் சாதி வெறித் தூண்டுதலை இவர் எப்படித் தடுப்பார்?

—கே. வி. சாமி, திருச்சி-15.

*0:809:* அன்பு கெழுமிய பாவலரேறு அவர்களுக்கு, ஐயா, தென்மொழி சுவடி 17, ஓலை 1-இல் தங்களின் ஆசிரிய உரையைப் பார்த்தேன். தமிழ் மக்கள், கல்வி, வேலை வாய்ப்பு முதலிய துறைகளில் அவர்களுக்குரிய பங்கைப் பெறுவது தங்களுக்குத் தவறாகப் படுகின்றது என்பது அதிலிருந்து நன்றாகப் புரிகிறது. அப்படியானால் நூற்றுக்கு மூன்று விழுக்காடு உள்ள பார்ப்பனர்களுக்கே கல்வி, வேலை இவற்றைத் தாரைவார்த்து விடலாம் என்பதுதான் தங்களின் எண்ணமா? அப்படிச் செய்துவிட்டால் பழையபடி மீண்டும் நாம் பார்ப்பானின் அடிமையாக வாழும் நிலைதானே ஏற்படும்? இதுதான் தங்களின் தமிழினத் தொண்டா? வகுப்புரிமை கேட்பதை, 'வெட்கமில்லாமல் குமுகாயத்தின் அடிப்படிகளில் நின்று கொண்டு மடி விரித்துக் கேட்கின்றோம். நாம் இவற்றாலெல்லாம் எப்படி முன்னேறி விட முடியும்? இழிவுகளைப் போக்கிக் கொள்ள முடியுமா?' எனக் கேட்கும் பாவலரே! நான் உங்களைக் கேட்கிறேன். தமிழ் மக்கள் கல்வி, பணித்துறை இவற்றில் தங்களுக்குரிய பங்கைப் பெற்று முன்னேறத் தாங்கள் கூறும் வழி வகைகள் தாம் யாவை? குறை கூறி விட்டால் மட்டும் போதுமா? 'அந்தோ! உம்மிடம் என் போன்றோர் பலர் எதிர்பார்த்தது பொய்யாய் விட்டது' என்று ஏங்குவதைத் தவிர வேறு என்ன செல்வது?

—ஈட்டி, பெருந்துறைத் தொடர்வண்டி நிலையம்.

*0:810:* மாண்புயர் ஐயா, வணக்கம். இத் திங்கள் ஆசிரிய உரை உடனடிச் செயல் திட்டத்திற்குரியதாய் உள்ளது. அஃதாவது சாதிப் பெயர்களை ஒழித்துக்கொள்ள மக்கள் தாங்களாகவே முன்வருமாறு செய்வதாகும். இம் முகாமையான பணியினை ஆற்றவல்ல ஆற்றல் தென்மொழிக்கு மட்டுமே உண்டு. ஏன் எனில் தென்மொழி வயிற்றுப்பாட்டுக்காகவன்றி வாய்மைக்காக வாழ்வதால். தென்மொழியில் சாதி இழந்து தமிழினம் ஆனோர் பட்டியல் வரிசை ஒன்றைத் தொடங்க வேண்டுகின்றோம். இவர்கள் கூடும் மாநாடு ஒன்று கூட்ட வேண்டுகின்றோம். இவர்கள் ஆற்றவேண்டிய செயல்கள் தொடர்பாகத் தாங்கள் நெறிப்படுத்த வேண்டுகின்றோம். இப்பணியைச் செய்வது தொடர்பாக தங்களின் பெருமைக்குரிய கட்டளைகளை எதிர் நோக்கும் உள்ளங்களில் ஒன்றான.

—மா. செ. தமிழ்மணி, நெய்வேலி

www.thamizham.net - Free E book No 7504

0:811: தமிழ்ப் புலமை சான்ற தகையீர்! வணக்கம். 'சாதி ஒழிப்பும் தமிழ்ச் செழிப்புமே பார்ப்பனியத்தை அழிக்கும்' என்ற தென்மொழியின் ஆசிரியவுரை கருத்துக் குருடர்களைக் கண்விழிக்கச் செய்யும் தெளிவுரையாகும். இனவுணர்வு துளியுமில்லாத இற்றைத் தமிழர் இவ்வுறக்கத்தினின்றும் எப்போதுதான் மீள்வரோ? ஒற்றுமையும் விழிப்புணர்ச்சியும் இல்லா நம்மவரின் போக்கால் பார்ப்பனியம் கொழுக்கவே செய்யும். முற்படுத்தப்பட்டோர் என்னும் பெயரால் நாடெங்கும் பல கிளை அமைப்புகளை உருவாக்கி வரும் பார்ப்பனர்கள் நம்மவர்களின் துணையோடு நமக்கெதிரான போராட்டத்தில் முனைப்புடன் இறங்கியுள்ளனர்!

பெரியாரின் மறைவுக்குப்பின் பின்னணி வலுவோடு எழுந்து நிற்கும் பார்ப்பனர்கள் நெல்லிக்காய்களாகச் சிதறுண்டு கிடக்கும் தமிழினத்துக்குக் கொள்ளி வைத்தே தீருவதெனச் சூள் உரைத்து விட்டனர் போலும்! **அரசியல் வல்லாண்மைப் போக்கும் தன்னல நோக்கும் பதவி வெறியும் நம்மை விட்டு அகலாதவரை நம் மொழியைக் காப்பதும், இனத்தை மீட்பதும் நீர்மேல் எழுத்தாகவே அமையும்!** வெடி குண்டே ஒலிப்பினும் விழிப்புறுத் தமிழர் பெருஞ் சித்திரனாரின் முணகல் ஒலிக்கா எழுந்து விடுவர்? எனினும்

"தூங்கும் புலியைத் தடிகொண்டெழுப்புவோம்!
தூங்கும் தமிழரைத் தமிழ்கொண்டெழுப்புவோம்!
வீறு கொள்வோம்! விடியலைக் காண்போம்!

—**கடலூர். மணிமாறன், க. மு.,** கிருட்டிணராயபுரம்.

0:812: சொற்றிறஞ்செறிந்த நற்றமிழறிஞ, பணிவான வணக்கம். ஆதியிலின்றிப் பாதியில் தோன்றிய சாதியையுந் தீதுறு வேதியர் கொள்கையையும் வேரறுக்கச் சீரார்ந்த செந்தமிழின் செம்மாந்த செழிப்பும், இடர்கண்டு கலங்காத இருந்தமிழருழைப்பும் இற்றைஞான்று நனி இன்றியமையாதன என்பதைத் தங்களின் ஆழ்ந்த மறுக்கவியலாக் கருத்துகளார்ந்த ஆசிரியவுரை யான் அறிந்தேன். நன்று. தாங்கள் காட்டும் தனித்தமிழ் நெறியிலே ஒரு பெரும் புத்தூழியைத் தோற்றுவித்துப் புதியதோருலகு படைக்கப் படைமறவர் நடைபோட்டுத் தங்களைப் பின்பற்றி வருதற்கு என்னனையர் பலருளர். தென்மொழியை உயிரெனப் பேணிக் காக்க ஓர் உரற்களமு முண்டு. எனவே, ஒப்பிலா மூப்படி நிலை முன்னேற்றப் பொறுப்பினைத் தாங்களே முன்னின்று மொய்ம்புறப் பேணுக. தங்களாலன்றி இத்தமிழுலகு ஒருநாளும் உய்தி பெறுதலில்லை. உண்மை. —**பெரு. தமிழ்வேந்தன்,** பவானிசாகர்.

0:813: பெருந்தகையீர், வணக்கம். தங்கள் நூற்சிரியத்தை (முதல் பகுதி) இன்னுள் வரை மும்முறை படித்து விட்டேன். நூருசிரியம் படிக்கப் படிக்கப் புதுத் தென்பு பிறக்கிறது. தங்களின் ஆழ்ந்த நுண்மான் நுழைபுலம் மிகு தெளிவாகத் தெரிகிறது. கழகக் காலப் புலவர் இக்கால் இல்லை என்றிருந்த நான் அது தவறு என்றுணர்ந்தேன். நூருசிரியத்தை முழுவதும் படிக்க வேண்டும் என்ற கொள்ளை ஆசை எனக்கு. தங்களின் பாடல்கள் அனைத்தும் படித்துப் பயனும் சுவையும் அடையவேண்டும் எனும் பேராவல் உண்டு. —**வீர. சுப்பையன்,** திருநகர், காசுமீரம்.


www.thamizham.net - Free E book No 7504